# ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு

பாடம் 4

## பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

**முன்னுரை** ........ 1

**நூற்தொகுப்பு ஒரு கண்ணாடியாக** ........ 2

**அடிப்படை** ........ 3

வேதாகமத்தின் தன்மை ........ 4

வேதாகம உதாரணங்கள் ........ 5

**நம் கவனம்** ........ 7

கோட்பாடுகள் ........ 8

உதாரணங்கள் ........ 9

தனிப்பட்ட தேவைகள் ........ 10

**பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு ஒரு ஜன்னல்** ........ 11

**அடிப்படை** ........ 12

வேதாகமத்தின் தன்மை ........ 13

வேதாகம உதாரணங்கள் ........ 18

**நம் கவனம்** ........ 20

ஒத்திசைவு நிழல்படம் ........ 20

மாறுதலின் சுவடு ........ 24

**நூற்தொகுப்பு ஒரு சித்திரம்** ........ 30

**அடிப்படை** ........ 32

வேதாகமத்தின் தன்மை ........ 32

வேதாகம உதாரணங்கள் ........ 36

**நம் கவனம்** ........ 39

எழுத்தாளர் ........ 40

வாசகர்கள் ........ 43

ஆவணம் ........ 45

**முடிவுரை** ........ 50

# முன்னுரை

ஒரு சபை அல்லது வேறு வகையான அமைப்பு போன்ற ஒரு பெரிய குழுவை வழிநடத்திய அனைவரும் குழுவுக்காக ஒரு பரந்த இலக்கைக் கொண்டிருப்பதும் சில அடிப்படைக் கொள்கைகளை நிறுவுவதும் முக்கியம் என்பதை அறிவார்கள். ஆனால் காலம் விரைவாக செல்வதால், குறிப்பிட்ட வாய்ப்புகளையும் சவால்களையும் பற்றி பேசுவது பெரும்பாலும் அவசியமானதாகிறது.

பண்டைய வேதாகம உலகில், பெரிய அரசர்கள் தங்கள் ராஜ்யங்களைப் பலப்படுத்துவதையும் விரிவுபடுத்துவதையும் இலக்காக கொண்டிருந்தனர், மேலும் அவர்கள் சர்வதேச ஒப்பந்தங்கள் மூலம் அடிப்படைக் கொள்கைகளை நிறுவினர். ஆனால் இந்த அரசர்கள் தங்கள் ராஜ்யங்கள் பல்வேறு அரச அறிக்கைகள் மூலம் எதிர்கொண்ட குறிப்பிட்ட வாய்ப்புகளையும் சவால்களையும் பற்றி பேசினர், அவற்றில் சில இன்றும் அருங்காட்சியகங்களில் இருக்கின்றன.

சகல சிருஷ்டிப்புகளுக்கும் ராஜாவாகிய இஸ்ரவேலின் தேவன், அதையே செய்தார் என்பது அந்த காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேலருக்கு ஆச்சரியமான காரியமல்ல. பூமியில் தம்முடைய ராஜ்யத்தைப் பலப்படுத்துவதும் விரிவுபடுத்துவதும் அவருடைய இலக்காக இருந்தது, உடன்படிக்கைகள் மூலம் தம்முடைய ராஜ்யத்தின் அடிப்படைக் கொள்கைகளை அவர் ஸ்தாபித்தார். ஆனால், தேவனும் தம்முடைய ராஜ்யமானது பல்வேறு அரச அறிக்கைகள் மூலம் எதிர்கொண்ட குறிப்பிட்ட வாய்ப்புகளையும் சவால்களையும் பற்றி பேசினார், அவற்றில் சில பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பில் இப்போது காணப்படுகின்றன.

இது *ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டின் நூற்தொகுப்பு* என்கிற நம் தொடரின் நான்காவது பாடமாகும். இந்தப் பாடத்தில், "பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பில்" நாம் கவனம் செலுத்துவோம். "நூற்தொகுப்பு" என்ற சொல் ஒரு பண்டைய கிரேக்க மற்றும் லத்தீன் வார்த்தையாகும், இதற்கு நமது "தரநிலை" அல்லது "அளவீடு" என்பது அர்த்தமாகும். இந்தப் பாடத்தில், வேதவாக்கியங்கள் காலங்காலமாக அவருடைய ஜனங்களுக்கு தேவனுடைய அதிகாரப்பூர்வமான தராதரமாக எவ்வாறு எழுதப்பட்டன என்பதை நாம் காண்போம்.

பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் தேவன் தம்முடைய ராஜ்யத்தை பரலோகத்திலிருந்து பூமியின் எல்லைகள் வரை பரப்புகிறார்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்று விசுவாசித்தார்கள். தொடர்ச்சியான முக்கிய உடன்படிக்கைகளில் அவர் ஸ்தாபித்த அடிப்படைக் கொள்கைகளின் மூலம் தேவன் தம்முடைய ராஜ்யத்தை நிர்வகித்தார் என்றும் அவர்கள் விசுவாசித்தார்கள். ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோரின் நாட்களிலும், தீர்க்கதரிசிகள் எதிர்காலத்தில் வரும் என்று கணித்த புதிய உடன்படிக்கையிலும் தேவன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். தேவன் ஆதாம், நோவா மற்றும் ஆபிரகாமுடன் உடன்படிக்கைகள் செய்த போது, எழுதப்பட்ட எந்த வேதாகமமும் இல்லை. ஆனால் மோசே மற்றும் தாவீதின் நாட்களில் இஸ்ரவேல் ஒரு ராஜ்யமாக வளர்ந்தபோது, தேவன் தம்முடைய உடன்படிக்கைகளின் கொள்கைகளை பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் மூலம் தம்முடைய ஜனங்களின் வாழ்க்கையில் பிரயோகித்தார். இந்த வேத வாக்கியங்கள் முதலில் பூர்வ இஸ்ரவேலரிடம் பேசுவதற்காக வடிவமைக்கப்பட்டது, ஆனால் அவை தேவ ஜனங்களின் ஒவ்வொரு தலைமுறைக்கும் விசுவாசம் மற்றும் வாழ்க்கையின் அளவுகோலாக வடிவமைக்கப்பட்டன.

தேவ ஜனங்கள் அவருடைய பண்டைய ராஜ வார்த்தையைத் தங்கள் வாழ்க்கையில் பிரயோகிக்கப் பயன்படுத்திய மூன்று முக்கிய உத்திகளை ஆராய்வதன் மூலம் இந்தப் பாடத்தில் பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பைப் பற்றி நாம் சிந்திப்போம். முதலாவதாக, நாம் பழைய ஏற்பாட்டை பல்வேறு கருப்பொருள்கள் அல்லது தலைப்புகளில் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகப் பார்ப்போம். இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டை வரலாற்றின் ஜன்னலாக ஆராய்வோம். மூன்றாவதாக, நாம் பழைய ஏற்பாட்டை ஒரு சித்திரமாக ஆராய்வோம் - அதாவது தேவனுடைய மக்களைக் குறித்த சில கண்ணோட்டங்களை வலியுறுத்திய இலக்கிய உருவப்படங்களின் தொடராக இதை ஆராய்வோம். இந்த மூன்று உத்திகள் ஒன்றையொன்று பிரிந்து செயல்படாதவைகளாகவும் அவைகள் எதைவும் சார்ந்திருக்காமலும் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நோக்கங்களுக்காக, பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பானது எப்படி ஒரு கண்ணாடியைப் போன்றதாக இருக்கிறது என்பதில் தொடங்கி, அவற்றை தனித்தனியாக ஆராய்வோம்.

# நூற்தொகுப்பு ஒரு கண்ணாடியாக

நண்பர்களுடன் சேர்ந்து ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது, சில விஷயங்கள் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றன, மற்ற விஷயங்கள் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்றன என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? இந்தப் புத்தகமே பல்வேறு தலைப்புகளைக் குறிப்பிடலாம், ஆனால் நாம் அனைவரும் நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் சிறப்பு கவனம் செலுத்த முனைகிறோம். தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஜனங்கள் பழைய ஏற்பாட்டைக் கையாண்டதால் இது எப்பொழுதும் உண்மையாக இருந்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் இறையியலையும் அவரின் உடன்படிக்கைகளின் கொள்கைகளையும் தங்கள் புத்தகங்களின் மூலம் அவருடைய மக்களுக்குப் பிரயோகித்தபோது பல விஷயங்களைப் பற்றி பேசினர். நாம் பழைய ஏற்பாட்டை அணுகுகையில், நம் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இந்த கருப்பொருள்களில் ஏதேனும் ஒன்றை நாம் முன்னிலைப்படுத்தலாம்.

நாம் பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை ஒரு கண்ணாடியைப் போல அணுகும்போது, அந்த கருப்பொருள்கள் வேதாகமத்தின் இரண்டாம் நிலை அல்லது சிறிய அம்சங்களாக இருந்தாலும் கூட, *நமது கவலைகள்* மற்றும் கேள்விகளைப் பற்றி பழைய ஏற்பாடு என்ன சொல்கிறது என்பதை முதன்மையாகப் பார்க்கிறோம். நாம் இந்த உத்தியை "கருப்பொருள் பகுப்பாய்வு" என்று அழைக்கிறோம், ஏனென்றால், நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க முற்படும்போது, நமக்கு முக்கியமான கருப்பொருள்கள் அல்லது தலைப்புகளில் பழைய ஏற்பாடு பிரதிபலிக்கும் வழிகளை நாம் தேடுகிறோம்.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு பெரும்பாலும் கருப்பொருள் பகுப்பாய்வில் ஒரு கண்ணாடியாக எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள, நாம் இரண்டு சிக்கல்களைத் தொடுவோம்: முதலாவதாக, இந்த உத்தியின் அடிப்படை அல்லது நியாயப்படுத்தலைப் பார்ப்போம்; இரண்டாவதாக, இந்த உத்தியின் கவனம் என்னவென்று பார்ப்போம். கருப்பொருள் பகுப்பாய்வின் அடிப்படையை முதலில் பார்ப்போம்.

## அடிப்படை

நாம் அதை உணர்கிறோமோ இல்லையோ, பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது, நமது அனுபவங்களிலிருந்து எழும் முன்னுரிமைகளிலிருந்து நம்மை முற்றிலுமாக பிரிப்பது சாத்தியமற்றது. நாம் பழைய ஏற்பாட்டை தேவன் தம் மக்களுக்கு கொடுத்த ராஜ வார்த்தையாக பார்க்கிறோம். ஆகவே, ஏதோ ஒரு அளவுக்கு, நம்மிடமுள்ள முக்கியமான பிரச்சனைகளை அவை எவ்வாறு கையாளுகின்றன என்பதைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையில் நாம் எப்பொழுதும் இந்த வேதாகமம் என்ன சொல்கிறதென்று பார்க்கிறோம். ஆனால் இந்த பொதுவான நடைமுறையானது "இது சரியான காரியமா?" என்கிற கேள்வியை எழுப்புகிறது. பழைய ஏற்பாட்டை *நாம்* ஆர்வத்துடன் படிப்பது சரியா?

நமது ஆர்வங்களின் கண்ணாடியாக பழைய ஏற்பாட்டை அணுகுவதற்கான அடிப்படையாக சேவை செய்யும் குறைந்தபட்சம் இரண்டு காரணிகள் உள்ளன: முதலாவதாக, வேதாகமத்தின் தன்மையே இந்த அணுகுமுறையை ஆதரிக்கிறது; இரண்டாவதாக, பல வேதாகம உதாரணங்கள்

அதை உறுதிப்படுத்துகின்றன. முதலில் வேதாகமத்தின் பாத்திரம் கருப்பொருள் பகுப்பாய்வைப் பயன்படுத்தி எவ்வாறு ஆதரிக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

## வேதாகமத்தின் தன்மை

எந்தவொரு குறிப்பிடத்தக்க நீளத்தில் இருக்கும் நன்கு எழுதப்பட்ட புத்தகங்களைப் போலவே, பழைய ஏற்பாட்டு புத்தகங்களும் பல சிறிய கூறுகளைக் கொண்டுள்ளன, அவை பிரிவுகளாக ஒன்றாகப் பொருந்துகின்றன. இந்தப் பிரிவுகள் ஒன்றிணைந்து பெரிய பிரிவுகளை உருவாக்குகின்றன, மேலும் இந்த பிரிவுகள் முழு புத்தகங்களையும் உருவாக்குகின்றன. இந்த நிலைகள் ஒவ்வொன்றும் பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் நமக்கு வழங்கும் விஷயங்களில் தன் சொந்த பங்களிப்பைச் அளிக்கின்றன. இந்த நிலைகள் எதிலும் நம் கவனத்தை ஒருமுகப்படுத்த நாம் முற்றிலும் சுதந்திரமாக உணர வேண்டும்.

துரதிருஷ்டவசமாக, பல நேர்மையான கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டு வசனங்களின் அர்த்தத்தை மிகவும் குறுகியதாக நினைக்கிறார்கள். ஒவ்வொரு பத்தியும் போதனைகளின் மிக மெல்லிய லேசர் கற்றையை வழங்குவது போல் உள்ளன, மேலும் அதை சுருக்கமாக்க ஒரே ஒரு வழி உள்ளது. ஆனால் உண்மையில், ஒரு லேசர் கற்றையைப் போல இருப்பதை விட, வேத பகுதிகளின் முக்கியத்துவம் படிப்படியாக பரவிய ஒளிக்கதிரைப் போல இருக்கிறது. சில கருப்பொருள்கள் மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்றன, மேலும் வேத பகுதிகள் அவற்றின் மீது பிரகாசமாக பிரகாசிக்கின்றன. இவை வேத பகுதிகளின் மிக முக்கியமான கருப்பொருள்களாகும். மற்றும் பிற தலைப்புகள், "சிறிய" கருப்பொருள்களாக இருக்கலாம். கருப்பொருள் பகுப்பாய்வு வேத பகுதிகளின் முக்கியத்துவத்தின் இந்த முழு வரம்பையும் அங்கீகரிக்கிறது, மேலும் பெரும்பாலும் இரண்டாம் அல்லது சிறிய தலைப்புகளின் மீது கவனத்தை ஈர்க்கிறது. உண்மையில், சிறிய தலைப்புகள் பொதுவாக கருப்பொருள் பகுப்பாய்வில் ஆய்வின் முதன்மைப் பொருள்களாக மாறுகின்றன.

நம் மனதில் என்ன இருக்கிறது என்பதற்கு ஒரு எளிய உதாரணத்தை கொடுப்பதற்கு வேதாகமத்தின் முதல் வசனமான ஆதியாகமம் 1:1 யைப் பார்ப்போம். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:1). "இந்த வசனம் என்ன போதிக்கிறது?" என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டால், முதல் பார்வையில், பதில் மிகவும் எளிமையானது என்று நாம் நினைக்கலாம்: ஆதியாகமம் 1:1 தேவன் உலகத்தை சிருஷ்டித்தார் என்று நமக்கு கூறுகிறது. நம்மில் பெரும்பாலானோர் அநேகமாக இந்த வசனத்தின் முக்கிய கருத்தை சுருக்கமாகக் கூறுவதற்கு இது ஒரு நியாயமான வழி என்பதை ஒப்புக்கொள்வார்கள். ஆனால், இந்த சுருக்கம் எவ்வளவு உண்மையாக இருந்தாலும், இந்த மையத் தலைப்பில் மட்டுமே நாம் கவனம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செலுத்தினால், இந்த வசனம் தொடும் வேறு பல கருப்பொருள்களை நாம் புறக்கணிக்க நேரிடும்.

இந்த சில வார்த்தைகளில் எத்தனை கருப்பொருள்கள் அல்லது கருக்கள் காணப்படுகின்றன? உண்மையில், இந்த பட்டியல் மிகவும் நீளமானது. தேவன் உலகை சிருஷ்டித்தார் என்ற உண்மையைப் பற்றிப் பேசுவதைத் தவிர, இந்த வசனமானது "தேவன் ஒருவர் இருக்கிறார்" மற்றும் "அவர் எல்லாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே இருந்தார்" போன்ற இறையியல் கருப்பொருள்களைத் தொடுகிறது. தேவன் சிருஷ்டிப்பதற்கு வல்லமையுள்ளவர் என்றும், அவர் சிருஷ்டிகராக ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அது நமக்குச் சொல்கிறது.

ஆதியாகமம் 1:1 சிருஷ்டிப்பு பற்றி நமக்கு சொல்கிறது. ஒரு சிருஷ்டிப்பு நிகழ்வு இருந்தது என்ற உண்மையை அது நமக்குச் சொல்கிறது, மேலும் அது எல்லாம் உருவாக்கப்பட்ட ஒரு காலத்தைப் பற்றி நமக்கு சொல்கிறது. சிருஷ்டிப்பு தன்னிறைவு பெற்றதல்ல என்பதை அது வெளிப்படுத்துகிறது; அது தன் தேவனைச் சார்ந்திருக்கிறது. பரலோகம் சிருஷ்டிப்பின் ஒரு பரிமாணம் என்றும் பூமி சிருஷ்டிப்பின் ஒரு பரிமாணம் என்றும் அது விளக்குகிறது. இந்த ஒரு வசனம் இதையும் இன்னும் பல சிறிய கருப்பொருள்களையும் தொடுகிறது, மேலும் நாம் சட்டப்பூர்வமாக அவற்றில் எதன் மீதும் நம்முடைய கவனத்தை செலுத்த முடியும்.

ஆதியாகமம் 1:1 போன்ற ஒரே ஒரு வசனத்தில் இவ்வளவு தலைப்புகள் காணப்பட்டால், பெரிய வேத பகுதிகளில் எத்தனை தலைப்புகள் காணப்படும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். குறிப்பிடத்தக்க நீளமுள்ள பெரும்பாலான பழைய ஏற்பாட்டு பகுதிகள் நமது ஆர்வங்கள் மற்றும் அனுபவங்கள் தொடர்பான பல பிரச்சனைகளைப் பற்றி பேசுகின்றன. நிச்சயமாகவே, நம்முடைய சொந்தக் கருத்துக்களை வேதாகமத்திற்குள் திணிக்காமல் கவனமாக இருக்க வேண்டும். ஆனால் பழைய ஏற்பாட்டு வசன பகுதிகள் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரச்சனைகளைப் பேசினால், இந்த கருப்பொருள்களிலிருந்து நாம் பயனடைவது மிகவும் பொருத்தமானது தான்.

பழைய ஏற்பாட்டை ஒரு கண்ணாடியாகக் கருதுவதற்கான அடிப்படையையும் நாம் கருப்பொருள் பகுப்பாய்வின் வேதாகம எடுத்துக்காட்டுகளில் காணலாம். தேவனால் ஏவப்பட்ட வேதாகம எழுத்தாளர்களும் வேதத்தில் உள்ள அதிகாரப்பூர்வ கதா பாத்திரங்களும் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டு பகுதிகளின் ஒப்பீட்டளவில் சிறிய அம்சங்கள் மீது நம் கவனத்தை ஈர்த்தன.

## வேதாகம உதாரணங்கள்

ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாக, எபிரெயர் 11:32-34 யை கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்கள் விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள் (எபிரெயர் 11:32-34).

நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் யெப்தா மற்றும் சிம்சோனின் கதைகளை நன்கு அறிந்த ஒவ்வொருவரும், இந்தப் புத்தகம் இந்த மனிதர்களை நல்ல உதாரணங்களாக காட்டவில்லை என்பதை அறிவார்கள். சொல்லப்போனால், நியாயாதிபதிகள் புஸ்தகத்தின் எழுத்தாளர், யெப்தா, சிம்சோன் உட்பட, வரலாற்றின் இந்தக் காலகட்டத்தில் இஸ்ரவேலின் தலைவர்களின் தார்மீகத் தோல்விகள் குறித்துத் திரும்பத் திரும்ப நமக்கு எடுத்துக்காட்டினார். தேவனுடைய ஜனங்களுக்குப் போதுமான தலைமையை வழங்க நியாயாதிபதிகள் தகுதியற்றவர்கள் என்பதை நிரூபிப்பதில் அவர்கள் தோல்வியுற்றதை அவர் எடுத்துக்காட்டினார்.

அப்படியிருந்தும், நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் யெப்தா மற்றும் சிம்சோனைப் பற்றி எழுதிய பதிவுகளும் இந்த இரண்டு நியாயாதிபதிகளைப் பற்றிய சாதகமான, ஆனால் ஒப்பீட்டளவில் சிறிய உண்மைகளைத்தான் தெரிவிக்கின்றன. இந்த இரண்டு மனிதர்களும் விசுவாசத்துடன் தேவனிடத்திற்குத் திரும்பியபோது தேவனுடைய எதிரிகளை வென்றனர். எனவே, எபிரெயர் புத்தகத்தின் எழுத்தாளர் பழைய ஏற்பாட்டில் விசுவாசத்திற்கான உதாரணங்களைத் தேடியபோது இந்த மனிதர்களின் நேர்மறையான சாதனைகளை குறிப்பிட்டார். தனக்கு முக்கியமாக இருந்த இந்த சிறிய கருப்பொருள்களை அவர் வலியுறுத்தியபோதிலும், எபிரெயர் புத்தகத்தின் எழுத்தாளர் நியாயாதிபதிகளின் புஸ்தகத்திற்கு உண்மையுள்ளவராகவே இருந்தார்.

> புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒப்பீட்டளவில் சிறிய விவரங்களை எடுத்து குறிப்பிடலாம், மேலும் அவர்கள் அந்த வேத பகுதிக்கு உண்மையாக இருக்கும் வரை அதிலிருந்து வாழ்க்கைப் பாடங்களை எடுத்துக்கொள்ளலாம். இயேசு ஒரு ஆச்சர்யமூட்டும் காரியத்தை சொல்கிறார். தேவனுடைய நியாயப்பிரமாணம் நிறைவேறுமுன் தேவனுடைய வார்த்தையின் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று அவர் கூறுகிறார். அதிலிருந்து நாம் ஊகிக்கக்கூடிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> காரியங்களில் ஒன்று என்னவென்றால், வேதாகமத்தில் இருக்கிற பெரிய பகுதியிலிருந்து சிறிய பகுதி வரை, தேவனால் ஏவப்பட்டும், அர்த்தமுள்ளவையாகவும், மதிப்பும் நோக்கமும் கொண்டவையாகவும் இருக்கின்றன. நாம் உண்மையில் புதிய ஏற்பாட்டில் இதைக் குறித்த பல உதாரணங்களை காண முடியும் - அதாவது, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் மற்றும் போதனைகளை மீண்டும் குறிப்பிட்டு அவைகளிடமிருந்து கூட சிறிய காரியங்களை நடைமுறைப் பாடங்களாக எடுத்துக்கொள்கிறார்கள். எபிரெய நிருபத்தின் எழுத்தாளர், அதிகாரம் 11 இல், பல பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை பட்டியலிட்டு, சுவிசேஷத்தின் மீதான பரந்த நம்பிக்கையைக் கருத்தில் கொண்டு எல்லா இடங்களிலும் உள்ள எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும் பொதுவான நியமங்களை அவர்களின் குறிப்பிட்ட அனுபவங்களிலிருந்து எடுத்துரைக்கிறார்.
>
> – Rev. கெவின் லாபி

பழைய ஏற்பாட்டை ஒரு கண்ணாடியாகக் கருதுவதற்கான அடிப்படையை அல்லது நியாயப்படுத்தலை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், இந்த உத்தியை நோக்கி நமது கவனத்தைத் திருப்ப வேண்டும்.

## நம் கவனம்

பழைய ஏற்பாட்டின் மீது நமக்கு இருக்கும் ஆர்வம் நபருக்கு நபர், காலத்திற்கு காலம் மற்றும் இடத்திற்கு இடம் வேறுபடும். இந்த காரணத்திற்காக, நாம் பழைய ஏற்பாட்டை ஒரு கண்ணாடியாக கையாளும்போது, பலவிதமான பிரச்சனைகளில் நாம் கவனம் செலுத்தலாம். இந்த பரந்த அளவிலான கருப்பொருள் பகுப்பாய்வு கும்ரான் அல்லது சவக்கடல் போன்ற பண்டைய யூத வியாக்கியான நூல்களிலும், பிற ஆரம்பகால யூத நூல்கள் மற்றும் டால்மட் ஆகியவற்றிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் பழைய ஏற்பாட்டின் கிறிஸ்தவ வியாக்கியானங்களில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. இருந்தாலும், கருப்பொருள் பகுப்பாய்வு மூலம் வேதாகமத்தைப் பார்க்கும்போது, பொதுவாக முன்னால் நகரும் சில தலைப்புகள் உள்ளன.

கருப்பொருள் பகுப்பாய்வின் மையத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, முதலில் இறையியல் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் பற்றியும், இரண்டாவதாக, எடுத்துக்காட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பற்றியும், மூன்றாவதாக, தனிப்பட்ட தேவைகளுக்கு கவனம்

செலுத்துவது பற்றியும் பேசுவோம். பழைய ஏற்பாட்டு பகுதிகள் இறையியல் கோட்பாடுகளைப் பற்றி என்ன கூறுகின்றன என்பதைப் பகுத்தறிவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம்.

## கோட்பாடுகள்

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, பழைய ஏற்பாடு பாரம்பரிய கோட்பாடுகளைக் குறித்த அதிகாரப்பூர்வ போதனைகளின் ஆதாரமாக பார்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவ இறையியலாளர்கள் பெரும்பாலும் முறைப்படுத்தப்பட்ட இறையியலின் தலைப்புகளிலிருந்து வரும் கேள்விகளைக் கேட்பதன் மூலம் கருப்பொருள் பகுப்பாய்வைப் பயன்படுத்துகின்றனர். நாம் ஒரு பழைய ஏற்பாட்டு பகுதியை அணுகி, ”தேவனுடைய பண்புகளைப் பற்றி அது என்ன சொல்கிறது?”, ”மனிதகுலத்தின் நிலையைப் பற்றி அது என்ன சொல்கிறது?” ”இரட்சிப்பின் கோட்பாட்டைப் பற்றி அல்லது பாவத்திற்கு எதிரான நியாயத்தீர்ப்புக் கோட்பாட்டைப் பற்றி அது என்ன சொல்கிறது?” போன்ற கேள்விகளைக் கேட்கிறோம். இங்கே இருக்கிற மற்றும் இதற்கு ஒத்த தலைப்புகளின்படி பழைய ஏற்பாட்டு பகுதிகளை வரிசைப் படுத்தும் ஒரு தலைப்பு வேதாகமத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். இந்த வகையான கருப்பொருள்களின் மீது அங்குள்ள வேத பகுதிகளின் முக்கிய கவனம் இல்லாமலிருக்கலாம். ஆனால் வேத பகுதிகள் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ அவற்றைத் தொட்டால், நம்மைப் பற்றிய பல பாரம்பரிய கேள்விகளுக்கு நாம் பதில்களைக் கண்டடைய முடியும்.

கோட்பாட்டு கருப்பொருள் பகுப்பாய்வு பெரும்பாலும் அடிப்படை வேத பகுதிகளின் வடிவத்தை எடுக்கிறது - அதாவது இந்த அல்லது அந்த போதனையை ஆதரிக்கும் குறிப்பிட்ட பழைய ஏற்பாட்டு பகுதிகளுக்கான விரைவான குறிப்புகளை எடுக்கிறது. ஏறக்குறைய ஒவ்வொரு முறையும் முறைப்படுத்தப்பட்ட இறையியலையோ, விசுவாச அறிக்கையையோ, அல்லது ஒரு திருச்சபை கோட்பாட்டு அறிக்கையை பற்றிய ஒரு புத்தகத்தை நாம் வாசிக்கும்போது, கோட்பாட்டு நிலைப்பாடுகளை ஆதரிப்பதற்காக பல பழைய ஏற்பாட்டு குறிப்புகள் குறிப்பிடப்படுவதை நாம் காண்கிறோம்.

துரதிருஷ்டவசமாக, சில இறையியலாளர்கள் சில நேரங்களில் பழைய ஏற்பாட்டு பகுதிகளை மிகவும் மோசமாக தவறாகப் பயன்படுத்தியுள்ளனர், அதனால் பல வியாக்கியான அறிஞர்கள் பழைய ஏற்பாட்டு பகுதிகளை ஆதாரமாக எடுப்பதை முற்றிலுமாக நிராகரித்துள்ளனர். ஆனால் ஒரு வேத பகுதி ஒரு பிரச்சனையைப் பற்றி பேசினால், ஆதார வசனங்கள் செல்லுபடியாகும், மேலும் இந்த கருப்பொருள்கள் சிறியதாக இருந்தாலும் கூட, அவை வேதாகம பகுதிகளில் கருப்பொருள்களை முன்னிலைப்படுத்தும் விரைவான வழிகளாகவும் இருக்கின்றன.

கோட்பாட்டில் கவனம் செலுத்துவதோடு, தார்மீக எடுத்துக்காட்டுகளை முன்னிலைப்படுத்துவது கருப்பொருள் பகுப்பாய்வின் மற்றொரு பொதுவான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வடிவமாகும். பெரும்பாலும், நாம் பின்பற்ற வேண்டிய அல்லது நிராகரிக்க வேண்டிய கதாபாத்திரங்களை அறிந்துகொள்வதற்காக பழைய ஏற்பாட்டைப் பார்க்கிறோம்.

## உதாரணங்கள்

உதாரணமாக, 1 சாமுவேல் 17-ல் தாவீது மற்றும் கோலியாத்து பற்றிய நன்கு அறியப்பட்ட கதையைக் கவனியுங்கள். பல நூற்றாண்டுகளாக, விசுவாசிகள் பின்பற்றுவதற்கான ஒரு முன்மாதிரியாக போதகர்கள் தாவீதை வைத்திருந்தனர். சவுலின் கவசத்தை வாங்கி உபயோகிக்க மறுத்ததற்காகவும், தேவனுடைய வல்லமையை விசுவாசித்ததற்காகவும், கோலியாத்தை தோற்கடித்ததற்காகவும் தாவீது புகழப்பட்டதை நாம் அடிக்கடி கேட்கிறோம். அவருடைய மனப்பான்மை, வார்த்தைகள் மற்றும் செயல்கள் எல்லா விசுவாசிகளும் தங்கள் சொந்த ஆவிக்குரிய சவால்களை எதிர்கொள்ளும்போது பின்பற்றுவதற்கான முன்மாதிரிகளாகக் கருதப்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, சமீபத்திய தசாப்தங்களில் பல வியாக்கியான அறிஞர்கள் 1 சாமுவேல் 17-ல் தாவீதை ஒரு தார்மீக முன்மாதிரியாக நடத்துவது பொருத்தமற்றது என்று வலியுறுத்தியுள்ளனர். சாமுவேல் புத்தகத்தின் இந்தப் பகுதி, தாவீதின் வீடு ஏன் சவுலின் வீட்டாருக்கு பதிலாக இஸ்ரவேலின் நிரந்தர அரச வம்சமாக மாற்றியது என்பதை விளக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது என்று அவர்கள் வாதிடுகின்றனர். எனவே, கோலியாத்தின் மீதான தாவீதின் வெற்றி, தாவீதின் மகத்தான குமாரனாகிய கிறிஸ்துவையும், பொல்லாங்கின் மீதான அவருடைய இறுதி வெற்றியையும் மட்டுமே சிந்திக்க கிறிஸ்தவர்களை வழிநடத்த வேண்டும் என்று அவர்கள் முடிவுக்கு வருகிறார்கள். இது ஒரு முக்கியமான கருப்பொருளாகும், ஆனால் இந்த வேத பகுதியிலிருந்து நாம் பெறக்கூடிய ஒரே அறிவுறுத்தல் இது மட்டுமல்ல. புதிய ஏற்பாடு கிறிஸ்துவைப் பின்பற்றும்படி நம்மை அழைப்பதுபோல, தாவீதின் சூழ்நிலைகளில் அவருக்கு இருந்த விசுவாசத்தை ஒவ்வொரு விசுவாசியும் பின்பற்ற வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் பின்பற்றப்பட வேண்டிய அல்லது நிராகரிக்கப்பட வேண்டிய எடுத்துக்காட்டுகள் அதிகம் உள்ளன. இந்த எடுத்துக்காட்டுகளைத் தேடுவது பழைய ஏற்பாட்டின் அதிகாரப்பூர்வ போதனையை கருப்பொருள் பகுப்பாய்வு மூலம் ஆராய்வதற்கான ஒரு நியாயமான வழியாகும்.

இறையியல் கோட்பாடுகள் மற்றும் வேதாகம எடுத்துக்காட்டுகளுடன் சேர்த்து, கருப்பொருள் பகுப்பாய்வின் மூன்றாவது பொதுவான மற்றும் முறையான கவனம் தனிப்பட்ட தேவைகளுக்கான வேத வாசிப்பாகும். பழைய ஏற்பாட்டு பகுதிகள் விசுவாசிகள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை எவ்வாறு கையாள்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள கருப்பொருள் பகுப்பாய்வு நமக்கு உதவுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தனிப்பட்ட தேவைகள்

ஒரு நல்ல தகப்பனாக அல்லது தாயாக எப்படி இருக்க வேண்டும், வேலையில் எப்படி வெற்றி பெறுவது, தேவனை எப்படி ஆராதிப்பது, அல்லது உணர்ச்சி ரீதியான போராட்டங்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய பழைய ஏற்பாட்டு பாடங்களை நாம் அனைவரும் கேட்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டு பகுதிகள் பெரும்பாலும் கருப்பொருள் பகுப்பாய்வு மூலம் இந்த வகையான தனிப்பட்ட காரியங்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு வழியாக பார்க்கப்படுகின்றன. இந்த விஷயங்கள் வேதாகம பகுதிகளின் சிறிய அம்சங்களாக மட்டுமே இருந்தாலும், பழைய ஏற்பாட்டு அவற்றை எவ்வாறு குறிப்பிடுகிறது என்பதை ஆராய்வது இன்னும் நமக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கலாம்.

உதாரணமாக, ஒரு தகப்பனாக தாவீதின் தோல்விகளைப் பற்றி ஊழியக்காரர்கள் தகப்பன்மார்களை சரியாக எச்சரிக்கிறார்கள். யாக்கோபு தன் மனைவிக்காக 14 வருடம் உழைத்ததிலிருந்து அவர்கள் கடின உழைப்பின் கொள்கைகளை பாடமாக எடுத்துக்கொள்கிறார்கள். ஆராதனையின் கூறுகளை விளக்குவதற்காக போதகர்கள் மெல்கிசேதேக்கு மற்றும் ஆபிரகாமின் கதைக்கு திரும்புகிறார்கள். ஆவிக்குரிய மனச்சோர்வை எதிர்கொள்ளும் விசுவாசிகளை வழிநடத்த, கர்மேல் மலையில் எலியா அனுபவித்த உணர்ச்சிப் போராட்டங்களை அவர்கள் பார்க்கிறார்கள்.

> வேதாகமம் நமது நெறிமுறை வாழ்க்கைக்கு நம்பகமான வழிகாட்டியாக இருப்பதை நான் காண்கிறேன், ஏனென்றால் தோல்வியுற்று மீண்டவர்களையும் தோல்வியுற்று ஒருபோதும் மீளாதாவர்களையும் பற்றிய நிகழ்வுகளை வேதம் தருகிறது, மேலும் தேவன் நம்மை மன்னிக்க இன்னும் தயாராக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. அவர் நம்மை மீட்டெடுக்கும் போது, தேவனுடைய கிருபையின் காரணமாக நாம் வெற்றியின் வாழ்க்கையை வாழ முடிகிறது… எனவே என்னைப் பொறுத்தவரை, வேதம் நமது நெறிமுறை வாழ்க்கைக்கு ஒரு நம்பகமான வழிகாட்டியாக இருக்கிறது. வேதத்தை நாம் தவறாகப் பயன்படுத்த முடியாது. நாம் வேதத்தைத் தவறாக மேற்கோள் காட்ட முடியாது, ஏனென்றால் மக்கள் தோல்வியுற்ற நிகழ்வுகள் நாம் கற்றுக்கொள்வதற்காக கொடுக்கப்பட்டுள்ளது, அந்த தவறை மீண்டும் செய்யக்கூடாது, மாறாக அந்த நடத்தையிலிருந்து கற்றுக்கொண்டு, நாம் எங்கு பாவம் செய்கிறோம், எங்கே நாம் தோல்வியடைகிறோம் என்பதைப் பார்ப்பது தான் அதன் நோக்கமாகும், எனவே தேவன் நாம் வாழ்வில் முதன்மையானவராக இருக்கும்படி,

பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் நம்மைக் காத்துக்கொள்வதே அதன் நோக்கமாகும்.

– Dr. ஆஷிஷ் கிறிஸ்பல்

கருப்பொருள் பகுப்பாய்வு மூலம் பழைய ஏற்பாட்டை ஒரு கண்ணாடியாக நடத்துவதால் அது பல வடிவங்களை எடுக்கிறது. இந்த உத்தி நாம் அதை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாத அளவுக்கு மதிப்புடையது. பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை நாம் ஆராயும்போது, இந்த வேதாகமம் முன்வைக்கும் ஒவ்வொரு சிறிய கருப்பொருள் மீதும் கூட கவனம் செலுத்துவது சரிதான்.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை நாம் ஒரு கண்ணாடியாக அணுகக்கூடிய சில வழிகளை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், தேவனுடைய மக்கள் பின்பற்றிய இரண்டாவது முக்கிய உத்தியான பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை வரலாற்றின் ஜன்னலாக அணுகுதல் என்பதை நாம் பார்க்கவிருக்கிறோம்.

# பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு ஒரு ஜன்னல்

தேவனுக்கு அவர்கள் செய்த உண்மையுள்ள சேவையானது கடந்த காலத்தில் தேவன் தங்களுக்காக என்ன செய்தார் என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டும் என்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரை மீண்டும் மீண்டும் எச்சரித்தனர். இந்த எச்சரிக்கைக்கு பிரதிபலிப்பாக, இஸ்ரவேலிலும் கிறிஸ்தவ சபையிலும் இருந்த உண்மையுள்ளவர்கள் எப்பொழுதும் பழைய ஏற்பாட்டை வரலாற்றின் ஜன்னலாக நடத்தியிருக்கிறார்கள். வேதாகம நம்பிக்கையானது புராணங்களிலோ, அரசியல் பிரச்சாரத்திலோ அல்லது அருவமான தத்துவத்திலோ வேரூன்றியிருக்கவில்லை. மாறாக, தேவன் சரித்திரத்தில் செயல்பட்டார் என்ற உண்மையிலும், தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதைப் பற்றிய நம்பகமான பதிவை வேதாகமங்கள் நமக்குத் தருகின்றன என்பதிலும் வேரூன்றியிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களை வரலாற்றில் தேவனுடைய செயல்களைப் பற்றி சிந்திக்க வழிநடத்தினார். இந்த காரணத்திற்காக, பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் வரலாற்று பகுப்பாய்வானது, பழைய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும், நம் வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான உத்தியாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கடந்த கால நிகழ்வுகளைப் பற்றிய ஒரு சாதாரண புத்தகத்தை நாம் வாசிக்கும்போது, அது விவரிக்கும் வரலாற்று நிகழ்வுகளை நோக்கி நமது கவனம் நகர்வது இயல்பானதுதான். சில நேரங்களில் நாம் வரலாற்றில் மிகவும் மூழ்கியிருக்கிறோம், அதனால் நம்முடைய சொந்த அனுபவங்களிலிருந்து எழும் கருப்பொருள்களைப் பற்றி சிந்திக்காமல் இருக்கிறோம். அதற்குப் பதிலாக, அந்தப் புத்தகத்தின் மூலம் நடந்த சம்பவங்களை நாம் கண்டு, அது விவரிக்கும் நாட்களில் விஷயங்கள் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று கற்பனை செய்கிறோம்.

இதேபோல், பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு நீண்ட காலத்திற்கு முன்பு இருந்ததைப் போலவே உலகை விவரிக்கிறது. பழைய ஏற்பாட்டை அந்த உலகத்திற்குள் பார்க்க நம்மை அனுமதிக்கும் ஒரு ஜன்னலாக அணுகுவதன் மூலம் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அரச அதிகாரத்திற்கு தேவனுடைய மக்கள் அடிபணிந்துள்ளனர். நாம் இந்த உத்தியை "வரலாற்று பகுப்பாய்வு" என்று பேசுவோம், ஏனென்றால் இது கடந்த கால நிகழ்வுகளிலும் பழைய ஏற்பாடு இந்த நிகழ்வுகளைப் பற்றி என்ன சொல்கிறது என்பதிலும் கவனம் செலுத்துகிறது.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் வரலாற்று பகுப்பாய்வை ஆராய, நாம் பழைய ஏற்பாட்டை வரலாற்றுக்கான ஒரு ஜன்னலாகக் கையாள்வதற்கான அடிப்படை அல்லது நியாயப்படுத்தல், மற்றும் இந்த உத்தியின் கவனம் ஆகிய இரண்டு பிரச்சனைகளைப் பற்றி பார்ப்போம். பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் வரலாற்று பகுப்பாய்வுக்கான அடிப்படையை முதலில் பார்ப்போம்.

## அடிப்படை

துரதிருஷ்டவசமாக, இப்போது பல நூற்றாண்டுகளாக, பல தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு வரலாற்று ரீதியாக நம்பகமானது என்று எந்த நியாயமான நபரும் நம்பவில்லை என்று கூறியுள்ளனர். இது சில ஆவிக்குரிய அல்லது தார்மீக வழிகாட்டுதலை வழங்கும் பக்தியுள்ள புனைவுகளை விட சிறந்த ஒன்றும் மட்டும் தான் என்கிறார்கள். பழைய ஏற்பாட்டு வரலாற்று பதிவுகளின் நம்பகத்தன்மையைப் பற்றிய இந்த சந்தேகம் நீண்ட காலமாக மிகவும் பரவலாக இருந்து வருகிறது, இது சில சுவிசேஷ கிறிஸ்தவர்களை கூட பாதித்துள்ளது. சில சுவிசேஷக சபையார்கள் பழைய ஏற்பாட்டை வரலாற்றின் ஜன்னலாக நடத்துவதை கைவிட்டுள்ளனர்.

பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் பகுப்பாய்வைத் தொடர்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் நிலைத்தன்மைக்காக, நாம் முன்பு தொட்ட வேதாகமத்தின் தன்மை மற்றும் வேதாகம உதாரணங்கள் ஆகிய இரண்டு விஷயங்களை மட்டும் பார்ப்போம். வேதாகமத்தின் தன்மை வரலாற்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பகுப்பாய்வுக்கு ஒரு திடமான அடிப்படையை வழங்கும் வழிகளைப் பற்றி முதலில் சிந்திப்போம்.

## வேதாகமத்தின் தன்மை

2 தீமோத்தேயு 3:16 இல் உள்ள பவுலின் நன்கு அறியப்பட்ட வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16).

இயேசு மற்றும் அவரது முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைகளைப் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாடு தேவனிடமிருந்து வருகிறது என்றும், அது தேவனால் ஏவப்பட்டது அல்லது "தேவனால் வெளி சுவாசிக்கப்பட்டது" என்று உறுதிப்படுத்துகிறார்கள். இந்த போதனைக்கு இணங்க, வேதவாக்கியங்கள் செய்யும் ஒவ்வொரு கூற்றும் உண்மை என்ற நம்பிக்கையுடன் பழைய ஏற்பாட்டைப் படிக்க கிறிஸ்தவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

> பழைய ஏற்பாட்டு வேதாகமங்களையும் அவற்றின் வரலாற்றுக் கூற்றுக்களையும் உண்மை என்று நாம் விசுவாசிகளாக வாசிக்க இரண்டாம் தீமோத்தேயு 3:16 நம்மைக் கட்டாயப்படுத்துகிறது, ஏனென்றால் 2 தீமோத்தேயு 3:16 இல், தேவனுடைய வார்த்தை தேவன் வெளி சுவாசித்தது என்று நாம் வாசிக்கிறோம். அதனால், ஒரு பரிபூரண தேவனிடமிருந்து ஒரு சரியான வார்த்தை பிழையில்லாமல் வருகிறது. பரிசுத்த ஆவியின் ஏவுதலுடன், வேதாகமத்தின் தவறாமையையும் பிழையற்ற தன்மையையும் நாம் நம்புகிறோம். எனவே, அந்த முன்முடிவில் தொடங்கி, வரலாற்றின் காரியங்களின் உண்மைத்தன்மையைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.
>
> – Rev. கெவின் லாபி

புதிய ஏற்பாட்டு விசுவாசமானது, கிறிஸ்து மூலம் தேவன் உண்மையில் வரலாற்றில் என்ன செய்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டதைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போலவே, பழைய ஏற்பாட்டு போதனைகளும் கிறிஸ்துவுக்கு முன்பு தேவன் உண்மையில் வரலாற்றில் என்ன செய்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டவை. இந்தக் காரணத்திற்காக, கிறிஸ்துவின் நேர்மையான சீஷர்கள் ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு வரலாற்றுக் கூற்றும் உண்மையான வரலாற்று நிகழ்வுகளை உண்மையாகப் பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பதை உறுதிப்படுத்துகிறார்கள். ஏதோ ஒன்று நடந்தது என்று பழைய ஏற்பாடு போதிக்கும்போது, அது தேவனுடைய அதிகாரத்துடன் பேசுகிறது. எனவே, அது நடந்தது என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

இந்தக் கண்ணோட்டத்திற்கு எதிராக பல்வேறு வகையான ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டுள்ளன. உதாரணமாக, வேதாகமத்தில் நிறைய காரியங்கள் விடுபட்டுள்ளதால், அவற்றை நம்ப முடியாது என்று பல அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். பழைய ஏற்பாட்டு வரலாற்றுப் பதிவில் நிறைய காரியங்கள் விடுபட்டுள்ளன என்பது உண்மைதான். அது குறிப்பிடுவதை விட அதிகமான காரியங்களைத் தவிர்க்கிறது. இது நமக்கு ஒரு ஆச்சரியமாக இருக்கக்கூடாது. அப்போஸ்தலனாகிய யோவான், யோவான் 21:25-ல் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி இவ்வாறு சொன்னதை நீங்கள் நினைவுகூரலாம்:

> இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். (யோவான் 21:25).

இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய எல்லாவற்றையும் எழுதினால் இந்த உலகம் கொள்ளாது என்பது உண்மையென்றால், பழைய ஏற்பாட்டில் பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்த எண்ணற்ற சம்பவங்களில் ஒரு சிறிய பகுதி மட்டுமே பழைய ஏற்பாட்டில் அறிவிக்கப்படுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இருந்தாலும் வரலாற்றைப் பற்றி வேதவசனங்கள் நமக்குச் சொல்வதன் உண்மைத்தன்மையை இந்தத் தெரிவுத்திறன் பாதிக்காது.

சந்தேகம் நிறைந்த வியாக்கியான அறிஞர்களும் பழைய ஏற்பாட்டின் வரலாற்று நம்பகத்தன்மைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர், ஏனெனில் இது இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளைக் குறிக்கிறது. தேவனும் ஆவியானவரும் பழைய ஏற்பாட்டுப் பதிவில் முக்கிய பங்கு வகிக்கின்றனர், இந்த உண்மை பெரும்பாலும் நவீன இயற்கைவாத வியாக்கியான அறிஞர்களுக்கு ஒரு ஏமாற்றமாகும். ஆனால் இது நம்மைத் தொந்தரவு செய்யக் கூடாது, ஏனென்றால் கிறிஸ்தவ விசுவாசம் ஆரம்பம் முதல் முடிவு வரை ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசமாகும். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த கர்த்தராக கிறிஸ்துவைப் பின்பற்றும் எவருக்கும் பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளை நம்புவதில் எந்தப் பிரச்சனையும் இருக்கக்கூடாது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் நம்பகமானவை என்று மக்கள் புரிந்துகொள்வதும் நம்புவதும் முக்கியம் என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் அது வேதாகமத்தின் நம்பகத்தன்மையைப் பேசுகிறது … 1 கொரிந்தியர் 15-ல் பவுல் சொல்லுகிறபடி, கிறிஸ்து உயிர்த்தெழாமல் இருந்திருந்தால், நம்முடைய விசுவாசம் பயனற்றதாக இருக்கும்; நாம் இன்னும் நமது பாவங்களில் இருந்திருப்போம். அதே வழியில், யாத்திராகமம் நிகழவில்லை என்றால், இஸ்ரவேலர் நாடுகடத்தப்படவில்லை என்றால், நாடுகடத்தப்பட்ட இஸ்ரவேலர் சொந்த நாட்டுக்கு திரும்பவில்லை என்றால், வேதாகம எழுத்தாளர்கள் அவைகளை விவரிக்கும் வழியில் அந்த விஷயங்கள் இல்லை என்றால், கிறிஸ்து உண்மையில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவில்லை என்றால், நம் விசுவாசத்தின் அடிப்படையே குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் உண்மையில் நடந்த வழியில் இல்லையென்றால், வேதாகமமே நம்பிக்கைக்குரியதாக இருக்கும். வேதமே நம்பிக்கைக்குரியதாக இருக்காது என்றால், தேவன் தம்முடைய மக்களுக்கு துல்லியமாக வெளிப்படுத்துகிற காரியம் என்ன என்கிற சித்திரம் நம்மிடமில்லை. எனவே, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் நாம் தேவனிடமிருந்து பெற்ற வெளிப்பாட்டின் நம்பகத்தன்மையின் ஒரு முக்கிய பகுதியாகும்.
>
> – Dr. ஜிம் ஜோர்டான்

பழைய ஏற்பாட்டின் வரலாற்று உண்மைத்தன்மைக்கு மிகப் பெரிய ஆட்சேபணை நவீன விஞ்ஞான ஆராய்ச்சியிலிருந்து வருகிறது. மிகவும் மதிக்கப்படும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிற விஞ்ஞானிகள் பழைய ஏற்பாட்டின் நம்பகத்தன்மையை மறுக்கிறார்கள் என்று அவர்கள் நம்பும் ஆதாரங்களை சுட்டிக்காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக, நோவாவின் நாளில் சிருஷ்டிப்புக் கணக்கையும் உலகளாவிய ஜலப்பிரளயத்தையும் பற்றி புவியியலாளர்கள் கேள்விகளை எழுப்புகிறார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வேதாகமத்தில் உள்ள பல வரலாற்று நிகழ்வுகளுக்கு எதிராக ஆதாரங்களை எழுப்புகிறார்கள்.

பழைய ஏற்பாட்டு வரலாற்று உண்மைகளையும் விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் சமரசம் செய்வது சில நேரங்களில் கடினம் என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் இது ஏன் என்று தெரிந்துகொள்வது முக்கியம். பழைய ஏற்பாட்டுக்கும் நவீன அறிவியலுக்கும்

இடையே ஏன் மாறுபாடுகள் உள்ளன? பழைய ஏற்பாட்டிற்கும் அறிவியல் சான்றுகளுக்கும் இடையில் இருக்கின்ற முரண்பாடுகளுக்கு குறைந்தபட்சம் மூன்று காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, சில சமயங்களில் விஞ்ஞானிகள் வேதாகமத்திற்கு எதிரான தங்கள் கூற்றுக்களை ஆதரிக்கும் அத்தாட்சிகளைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். தொல்லியல் மற்றும் பிற அறிவியல்களை நாம் எவ்வளவு மதித்தாலும், விஞ்ஞானிகள் தவறுகள் செய்கிறார்கள். அவர்களின் முடிவுகள் மேலும் ஆராய்ச்சி செய்தால் திருத்தத்திற்கு உட்பட்டவைகளாகவே இருக்கின்றன. உதாரணமாக, பழைய ஏற்பாடு ஏத்திய மக்களைக் குறிப்பிடும் போது அது தவறு என்று கடந்த காலத்தில் பல அறிஞர்கள் வலியுறுத்தினர், ஏனெனில் ஏத்தியர்களைப் பற்றிய கூடுதல் பதிவுகள் எதுவும் வேதாகமத்தில் இல்லை. ஆனால் கடந்த நூற்றாண்டில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏத்தியர்களின் கலாச்சாரத்தைக் கண்டறிந்தனர். சொல்லப்போனால், ஏத்தியரின் எழுத்துக்கள் பழைய ஏற்பாட்டு ஆய்வுகளுக்கு தேவையான மிகவும் பயனுள்ள தகவல்களை வழங்கியுள்ளன. அதே வழியில், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியேறிய மற்றும் கானானை சுதந்தரித்த தேதி மிகவும் முன்னதாகவே இருந்தது என்பது அறிஞர்களின் ஒரு நிலையான கருத்தாகும். இருப்பினும், சமீபத்திய தசாப்தங்களில், தொல்பொருள் தரவுகள் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன, மேலும் வேதாகம பதிவுக்கு ஆதரவாக அவிசுவாசிகளால் கூட வலுவான வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாடு அறிவியல் சான்றுகளுடன் ஒத்துப்போகாதபோது, விஞ்ஞானிகள் வெறுமனே தங்கள் ஆதாரங்களை மதிப்பிடுவதில் தவறாக இருக்கலாம் என்ற உண்மையை இது போன்ற எண்ணற்ற பிற எடுத்துக்காட்டுகள் நமக்கு எச்சரிக்கின்றன.

வேதாகமப் பதிவுகளுக்கு முரணாக அறிவியல் ஆராய்ச்சி தோன்றுவதற்கு இரண்டாவது காரணம், வேதாகம உரைபெயர்ப்பாளர்கள் பழைய ஏற்பாட்டையே தவறாகப் புரிந்து கொண்டதால்தான். 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கலிலியோவுக்கும் சபை அதிகாரிகளுக்கும் இடையிலான போராட்டமே இவ்வகையான சர்ச்சைகளுக்கு உன்னதமான எடுத்துக்காட்டு ஆகும். கலிலியோ பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று வாதிட்டார்; அதேசமயம், சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்று வேதாகமத்தின் அடிப்படையில் சபை வாதிட்டது. இந்த சர்ச்சையின் பெரும்பகுதி யோசுவா 10:13 ஐ மையமாகக் கொண்டிருந்தது, அங்கு நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது (யோசுவா 10:13).

சூரியன் உண்மையில் சிறிது நேரம் பூமியைச் சுற்றி வருவதை நிறுத்திவிட்டது என்று பல நூற்றாண்டுகளாக சபை இந்த வசனத்தை அர்த்தப்படுத்தியது, மேலும் அவர்கள் சூரிய மண்டலத்தின் சாத்தியத்தை நிராகரித்தனர். இருப்பினும், பூமி சூரியனைச் சுற்றி வரும் போது பூமி அதன் அச்சில் சுழலும் காரணிகள் தான் இரவும் பகலும் என்று அறிவியல் ஆராய்ச்சி உறுதியாக நிறுவியுள்ளது. இதன் விளைவாக, பெரும்பாலான நவீன கிறிஸ்தவர்கள் யோசுவா 10:13 இன் விளக்கத்தை மாற்றியுள்ளனர். யோசுவாவுக்கு எப்படியோ பகல் வெளிச்சம் அற்புதமாக நீட்டிக்கப்பட்டது என்று நாம் உறுதியாக நம்பலாம். ஆனால் நாம் இப்போது இந்த வசனத்தையும் அது போன்ற மற்ற வசனங்களையும் சாதாரண, தோற்ற நிகழ்வு மொழியாக, அவை தோன்றுகிற வண்ணமாகவே எடுத்துக்கொள்வதாகும், நவீன உலகில் ”சூரிய உதயம்” மற்றும் ”சூரிய அஸ்தமனம்” போன்றவற்றை நாம் பேசும் விதத்தைப் போலவே எடுத்துக் கொள்கிறோம். சூரிய மண்டலத்திற்கான அறிவியல் சான்றுகளின் வலிமை பழைய ஏற்பாட்டின் வரலாற்று நம்பகத்தன்மையை நிராகரிக்கவில்லை, ஆனால் பழைய ஏற்பாட்டின் இந்த பகுதியைப் பற்றிய நமது விளக்கத்தை சரிசெய்ய அது நமக்கு உதவியது.

விஞ்ஞான அத்தாட்சிகளும் வேதாகமங்களும் சில சமயங்களில் இணக்கமற்றதாகத் தோன்றுவதற்கு மூன்றாவது காரணம் என்னவென்றால் இரண்டையும் நாம் தவறாகப் புரிந்துகொண்டிருப்பதாகும். விஞ்ஞானிகள் மற்றும் வேத உரைபெயர்ப்பாளர்கள் தவறுவது இயல்பு தான். எனவே, விஞ்ஞானிகள் மற்றும் வேத உரைபெயர்ப்பாளர்கள் இருவரும் தவறு செய்கிறார்கள் என்பதை உயர்மட்ட ஆராய்ச்சி நிரூபிக்கும் சாத்தியக்கூறுகளை நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பழைய ஏற்பாட்டைப் பற்றிய வரலாற்றுப் பகுப்பாய்வை நாம் பின்தொடரும்போது, உண்மையான வரலாற்றுக்கும் பழைய ஏற்பாட்டுப் பதிவுக்கும் இடையிலான சில வெளிப்படையான முரண்பாடுகள் ஒருபோதும் தீர்க்கப்படாமல் போகலாம் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டின் வரலாற்று நம்பகத்தன்மையில் நமக்கு இருக்கும் நம்பிக்கைக்கு ஒவ்வொரு ஆய்வுத் துறையும் தொடர்ந்து புதிய சவால்களை முன்வைக்கும், மேலும் இந்த சவால்கள் அனைத்தையும் சரிசெய்யலாம் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நாம் அடிக்கடி ஒரளவு புரிதலைப் பெறலாம், மேலும் சில நம்பத்தகுந்த தீர்வுகளைக் கூட வழங்கலாம், ஆனால் எல்லா வரலாற்று சிக்கல்களையும் சரிசெய்ய முடியும் என்கிற அளவுக்கு நாம் வரவில்லை.

விஞ்ஞான கண்ணோட்டங்களுக்கும் பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் பதிவுக்கும் இடையில் என்ன மாறுபாடுகள் எழுந்தாலும், தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நேர்மையான மக்கள் கிறிஸ்துவும் அவருடைய முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் வேதாகமத்தைப் பற்றி கற்பித்ததைப் பின்பற்ற வேண்டும். பழைய ஏற்பாட்டின் தெய்வீக ஏவுதல் அதன் வரலாற்று உண்மைத்தன்மையை நிறுவுகிறது. இந்த காரணத்திற்காக, பழைய ஏற்பாட்டை வரலாற்றின் ஜன்னலாக அணுகுவது சரிதான்.

வேதாகமத்தின் பண்பு வரலாற்று பகுப்பாய்வை எவ்வாறு ஆதரிக்கிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், பழைய ஏற்பாட்டில் வேதாகம உதாரணங்கள் என்கிற இந்த அணுகுமுறைக்கான இரண்டாவது அடிப்படை அல்லது நியாயப்படுத்தலுக்கு திரும்ப வேண்டும்.

## வேதாகம உதாரணங்கள்

வேதாகமத்தில் வேதாகம எழுத்தாளர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டின் வரலாற்று உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திய அதிகாரப்பூர்வ வேதாகம கதாபாத்திரங்களின் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. வேதாகமம் அனைத்திலும், வேதாகம எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டின் வரலாற்று நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கிய ஒரு உதாரணம் கூட இல்லை. உதாரணமாக,1 நாளாகமம் 1:1-4-ல் புத்தகத்தை எழுதியவர், தனது வம்சவரலாறுகளில் பழைய ஏற்பாட்டின் வரலாற்றுத் தன்மையை நம்பியிருப்பதைப் பாருங்கள். அவர் தனது வம்சவரலாறை பின்வருமாறு தொடங்கினார்:

> ஆதாம், சேத், ஏனோஸ்; கேனான், மகலாலெயேல், யாரேத்; ஏனோக்கு, மெத்தூசலா, லாமேக்கு; நோவா, சேம், காம், யாப்பேத் (1 நாளாகமம் 1:1-4).

நவீன கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, நாளாகம புத்தகத்தின் ஆசிரியர் இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றைச் செய்தார். ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களிலிருந்து பதிமூன்று பேரைக் குறிப்பிட்டு ஆதியாகமத்தின் முதல் ஐந்து அதிகாரங்களை வரலாற்று ரீதியாக நம்பகமானதாக அவர் கருதினார். பெரும்பாலான நவீன மக்கள் இந்த அதிகாரங்களை புராணமாகவோ அல்லது கற்பனையானதாகவோ கருதுகின்றனர். ஆனால், ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில்கூட, வரலாற்று நம்பகத்தன்மையின் மீது தன்னுடைய முழு நம்பிக்கையையும் நாளாகம ஆசிரியர் வெளிப்படுத்தினார். அவர் பல பழைய ஏற்பாட்டு புத்தகங்களை வரலாற்றுக்கு ஒரு அதிகாரப்பூர்வ ஜன்னலாக நம்பச் சென்றபோது அவர் ஆதியாகமத்தைப் பயன்படுத்தினார்.

அதேபோல், அப்போஸ்தலர் 7 இல் ஸ்தேவானின் பேச்சைப் பற்றிய லூக்காவின் பதிவையும் கவனியுங்கள். பழைய ஏற்பாட்டின் பல்வேறு பகுதிகளைப் பயன்படுத்தி, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, ஆரோன், யோசுவா, தாவீது, சாலொமோன் ஆகியோரை வரலாற்றுப் பிரமுகர்களாகக் கருதி ஸ்தேவான் பேசினார். பழைய ஏற்பாட்டில் பதிவு

செய்யப்பட்ட அவர்களைப் பற்றிய கதைகள் உண்மை என்று அவர் உறுதிப்படுத்தினார். ஸ்தேவானைப் பொறுத்தவரை, பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட வரலாறு உண்மைதான். அந்த வரலாற்றுப் பதிவு அவரது இறையியலுக்கு ஒரு அடிப்படையாக செயல்பட்டது, ஏனெனில் அவர் தனது சக யூதர்களை மனந்திரும்புதலுக்கும் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதற்கும் அழைத்தார்.

> வேதாகம எழுத்தாளர்கள் வரலாற்றில் தேவன் கிரியை செய்ததை உறுதியாக நம்புகிறார்கள், எனவே பழைய ஏற்பாட்டின் ஆரம்ப பக்கங்களிலிருந்து, எடுத்துக்காட்டாக உபாகமம் 26 இல் இஸ்ரவேலின் ஆராதனையானது தேவனுடைய கிரியைகளில் வேரூன்றியிருப்பதை நாம் காண்கிறோம். இஸ்ரவேலர்கள் தங்கள் காணிக்கைகளை பலியிடுவதற்காகக் கொண்டுவரும்போது, ”என் தகப்பன் [ஆபிரகாம்] அலைந்து திரிந்து கொண்டிருந்த அராமைச் சேர்ந்தவன்” என்று சொல்லவேண்டும் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தேவனுடைய மக்களின் ஆராதனையின் ஒரு பகுதியானது எப்போதும் வரலாற்று ஒத்திகையாகும். அதாவது தேவன் வரலாற்றில் என்ன செய்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுதலாகும் ... இதையும் நாம் பவுலிடம் காண்கிறோம். அந்தியோகியாவின் பிரிகியாவாவில் உள்ள ஒரு ஜெபஆலயத்தில் அவர் பிரசங்கிக்கையில், தேவனுடைய ஜனங்களுக்குள்ளே தேவனுடைய செயலைப் பற்றி பேசுகிறார். அவர் யாத்திராகமத்தில் தொடங்கி நியாயாதிபதிகளின் காலத்திற்கு வருகிறார், பின்னர் அவர் தேவன் தலைவர்களை எழுப்பியிருக்கிறார் என்று கூறி, ”தேவன் தாவீதின் குமாரனைத் தம்முடைய வல்லமையுள்ள புயத்தினாலே எழுப்பி, அவனை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.” என்கிற கருப்பொருளைப் பயன்படுத்துகிறார். எனவே, வரலாற்றில் தேவனுடைய கிரியைக்கு சான்றாக வேதாகம ஆதாரத்தை எடுத்துக்கொள்வதும், அதற்காக அவர்களின் கணக்கைச் சார்ந்திருப்பதும் ஒவ்வொரு வேதாகம எழுத்தாளரும் செய்கிற ஒன்று தான். ...
>
> – Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

வரலாற்றின் ஜன்னலாக பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை அணுகுவதற்கான அடிப்படையை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், இந்த வியாக்கியான உத்தியின் கவனம் என்ன என்கிற இரண்டாவது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிரச்சனையின் பக்கம் நாம் நம்முடைய கவனத்தைத் திருப்ப வேண்டும். பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் வரலாற்றுப் பகுப்பாய்வின் இலக்குகள் யாவை?

# நம் கவனம்

பொதுவாக, பழைய ஏற்பாட்டை வரலாற்றின் ஜன்னலாக கையாள்வது வேதாகமத்திற்கான மற்ற அணுகுமுறைகளைப் போலவே அதே இலக்கைக் கொண்டுள்ளது. உண்மையுள்ளவர்கள் தங்கள் தெய்வீக ராஜாவின் சித்தத்தை அறிய முயல்கிறார்கள். ஆனால் வரலாற்றுப் பகுப்பாய்வானது, தேவன் தம்முடைய மக்களுக்குத் தெரிவித்ததைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட வழியைக் கொண்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் வரலாற்று பகுப்பாய்வின் மிக அடிப்படையான வடிவம் வரலாற்று மறுசீரமைப்பு ஆகும். இதன் அர்த்தம் என்னவென்றால் பழைய ஏற்பாட்டை அதன் மற்ற ஆதாரங்களுடன் பயன்படுத்தி, கடந்த காலத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதை நிறுவுவதாகும். ஆனால் வரலாற்றுப் பகுப்பாய்வு ஒரு தனித்துவமான இறையியல் வடிவத்தையும் எடுத்துள்ளது. கடந்த காலத்தில் தேவனுடைய செயல்களையும் வார்த்தைகளையும் கண்டுபிடிப்பதற்கும், பின்னர் தேவ ஜனங்களின் வாழ்க்கைக்கு அவற்றின் இறையியல் முக்கியத்துவத்தை அப்பியாசப்படுத்துவதற்கும் வரலாற்றுக்கான ஜன்னலாக பழைய ஏற்பாடு பயன்படுத்தப்படுகிறது.

கடந்த நூற்றாண்டில், இறையியல் வரலாற்று பகுப்பாய்வின் ஒரு பிரபலமான வடிவம் ”வேதாகம இறையியல்” ஆகும். ”வேதாகம இறையியல்” என்ற பதம் வேதத்தை அணுகுவதற்கான பல வேறுபட்ட அணுகுமுறைகளைக் குறிக்கலாம், ஆனால் சுவிசேஷ கிறிஸ்தவர்களிடையே பரவலாக இருக்கும் வேதாகம இறையியலின் ஒரு வடிவத்தை நாம் முன்னிலைப்படுத்துவோம்.

வேதாகம இறையியலின் இந்த முக்கிய வடிவம் பொதுவாக இரண்டு முக்கிய படிகளில் கவனம் செலுத்துகிறது: முதலாவதாக, வேத இறையியலாளர்கள் வரலாற்றுக் காலங்களின் ”ஒத்திசைவு நிழல்படம்” என்று நாம் அழைக்கக்கூடியதை உருவாக்குகிறார்கள், இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டு வரலாற்றின் மூலம் ஒரு ”மாறுதலின் சுவடு” என்று நாம் அழைக்கக்கூடியதை அவர்கள் ஆராய்கிறார்கள். இந்த இரண்டு படிகளும் எண்ணற்ற வழிகளில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் நம்முடைய நோக்கங்களுக்காக அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பார்ப்போம், ஒரு ஒத்திசைவு நிழல்படத்தை உருவாக்குவதில் இருந்து துவங்குவோம்.

## ஒத்திசைவு நிழல்படம்

”ஒத்திசைவு” என்ற சொல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடக்கும் நிகழ்வுகளைக் குறிக்கிறது. வேத இறையியலாளர்கள் வேதாகம வரலாற்றின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு காலகட்டத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் ஒத்திசைவு நிழல்படங்களை உருவாக்குகிறார்கள், பின்னர் அந்த காலகட்டத்தில் நடந்த தேவனுடைய செயல்கள் மற்றும் வார்த்தைகளின் சிக்கலான காரியங்களை சுருக்கமாகக் கூறுகின்றனர். இந்த சுருக்கங்கள் வேத வரலாற்றில் நேரத்தின் பகுதிகளை ஒத்திசைக்கப்பட்ட அலகுகளாக அல்லது நேரத்தின் துண்டுகளாகக் கருதுகின்றன.

பழைய ஏற்பாட்டு வரலாறு ஒரு நதியைப் போல ஓடியது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதன் வரலாறு தனித்துவமான பிரிவுகளாகப் பிரிக்கப்படவில்லை. எனவே, பாயும் நதியை தனித்துவமான பிரிவுகளாகப் பிரிப்பது எப்படி செயற்கையானதாக இருக்கிறதோ அதைப் போல, பழைய ஏற்பாட்டு வரலாற்றின் ஒத்திசைவு நிழல்படங்களை உருவாக்குவது எப்போதும் ஓரளவு செயற்கையானதாகும். இருப்பினும், ஒரு ஆற்றின் வெவ்வேறு பகுதிகளைப் பற்றிப் பேசுவது நன்மை பயக்கும். அதேபோல், பழைய ஏற்பாட்டு வரலாற்றைக் காலக் கட்டங்களாகப் பிரிப்பதும், அந்தக் காலகட்டங்களில் தேவன் என்ன செய்தார், என்ன சொன்னார் என்பதைச் சுருக்கமாகக் கூறுவதும் நன்மை பயக்கும். இதை நாம் பல்வேறு வழிகளில் செய்ய முடியும்.

தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிய நமது முந்தைய பாடத்தில், ஆதி கால வரலாறு, இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு மற்றும் எதிர்கால புதிய ஏற்பாட்டு வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் நாம் பேசினோம் என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். இந்தக் காலங்கள் ஒவ்வொன்றிலும் தேவன் என்ன சொன்னார், என்ன செய்தார் என்பதைக் கவனித்தது, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய பல விஷயங்களைப் புரிந்துகொள்ள நமக்கு உதவியது.

ஆனால் தெய்வீக உடன்படிக்கைகளைப் பற்றிய நமது பாடத்தில், நாம் வேத வரலாற்றை உடன்படிக்கைக் காலங்களாகப் பிரித்தோம் என்பதையும் நீங்கள் நினைவுகூருவீர்கள். தேவனுடைய உலகளாவிய உடன்படிக்கைகள், இஸ்ரவேலுடனான தேவனுடைய தேசிய உடன்படிக்கைகள், தேவனுடைய எதிர்கால புதிய உடன்படிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி நாம் பேசினோம். இந்த மூன்று பெரிய சகாப்தங்களையும் சிறிய காலகட்டங்களாகப் பிரிக்கச் சென்றோம். ஆதாமுடன் தேவன் ஏற்படுத்தின அஸ்திபாரங்களின் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிற உடன்படிக்கையின் காலமும் நோவாவுடன் தேவன் ஏற்படுத்தின ஸ்திரத்தன்மையின் உடன்படிக்கை என்கிற உடன்படிக்கையின் காலமும் உலகளாவிய உடன்படிக்கைகளில் அடங்கும். ஆபிரகாமின் காலத்தில் இருந்த இஸ்ரவேலைத் தெரிந்தெடுத்தல் அல்லது வாக்குத்தத்த உடன்படிக்கையும் மோசேயின் காலத்தில் இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையும் மற்றும் தாவீதின் காலத்தில் இருந்த அரசாட்சியின் உடன்படிக்கையும் தேசிய உடன்படிக்கைகளில் அடங்கும். நிறைவேறுதலின் உடன்படிக்கையான புதிய உடன்படிக்கையின் காலத்தை அதன் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவு போன்றவைகளாக நாம் பிரித்தோம். இந்தப் பிரிவுகள், வெவ்வேறு உடன்படிக்கைகளின் மூலம் தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஸ்தாபித்த அடிப்படை ராஜ்யக் கொள்கைகளை வேறுபடுத்திப் பார்க்க நமக்கு உதவின. ஆனால் இந்த வரலாற்றுப் பிரிவுகள் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் ஒத்திசைவு நிழல்படங்களை உருவாக்குவதற்கான பல வழிகளில் இரண்டு மட்டுமே ஆகும்.

எடுத்துக்காட்டாக, *வெஸ்ட்மினிஸ்டர் விசுவாச அறிக்கையின்* ஏழாவது அத்தியாயம் ஆதாம் பாவம் செய்வதற்கு முந்தைய காலமான ”கிரியைகளின் உடன்படிக்கை” யையும் புதிய ஏற்பாடு உட்பட வேத வரலாற்றின் எஞ்சிய பகுதிகளை உள்ளடக்கிய ”கிருபையின் உடன்படிக்கை” யையும் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தை குறிக்கும் ”நியாயப்பிரமாணத்தின் கீழ்” இருந்த காலத்திற்கும், புதிய ஏற்பாட்டை குறிக்கும் ”சுவிசேஷத்தின் கீழ்” இருந்த காலத்திற்கும் இடையே கிருபையின் உடன்படிக்கையில் ஒரு முக்கியமான பிரிவையும் இது குறிக்கிறது.

கடந்த நூற்றாண்டில், பிரின்ஸ்டன் இறையியல் கல்லூரியைச் சேர்ந்த பரவலாக மதிக்கப்படும் வேத இறையியலாளர் கீர்ஹார்டஸ் வோஸ் என்பவர் மற்ற அளவுகோல்களைப் பயன்படுத்தி பழைய ஏற்பாட்டைப் பிரித்தார். உடன்படிக்கைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, தெய்வீக வெளிப்பாட்டின் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் உள்ள முக்கிய மாற்றங்களின்படி அவர் காலங்களை அடையாளம் கண்டார். வீழ்ச்சிக்கு முந்தைய மீட்பு சகாப்தத்தைப் பற்றி அவர் பேசினார்; வீழ்ச்சிக்குப் பிந்தைய மற்றும் ஆதாம் மற்றும் ஏவாள் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கு முந்தைய காலமான முதல் மீட்பு காலம்; ஆதாம் மற்றும் ஏவாள் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட காலத்திற்கும் நோவாவின் நாளில் நிகழ்ந்த ஜலப்பிரளயத்திற்கும் இடைப்பட்ட காலம்; ஜலப்பிரளயத்திற்கும் முற்பிதாக்களின் காலத்திற்கும் இடைப்பட்ட காலம்; முற்பிதாக்களின் காலம்; மோசேயின் காலம்; மேலும், மோசேக்குப் பிந்தைய தீர்க்கதரிசன காலம். ஒரு கிறிஸ்தவராக, அவர் புதிய ஏற்பாட்டின் காலத்தையும் சேர்த்தார்.

ஒரு காலகட்டம் அடையாளம் காணப்பட்டவுடன் அந்தக் காலகட்டத்தில் தேவனையும் அவருடைய சித்தத்தையும் வெளிப்படுத்திய வரலாற்று நிகழ்வுகளின் வலைப்பின்னலில் கவனம் செலுத்துவது தான் வேத இறையியலாளரின் வேலையாகும். எந்த வரலாற்றுக் காலகட்டத்திலும், நடந்த அனைத்து நிகழ்வுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பது நிச்சயமாகும். ஆனால் வேதாகமம் சில சம்பவங்களை மற்றவைகளைவிட அதிகமாக எடுத்துக்காட்டுகிறது. எனவே, வேத இறையியலாளர்கள் பொதுவாக வேத வரலாற்றின் இந்த வளர்ச்சி அல்லது மைய நிகழ்வுகளில் கவனம் செலுத்துகின்றனர்.

உதாரணமாக, பெரும்பாலும் ”வாக்குத்தத்தத்தின் காலமான” இஸ்ரவேலின் பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு வாழ்ந்த காலங்கள் என்று அழைக்கப்படுகிற பழைய ஏற்பாட்டு வரலாற்று துண்டின் மீது வேத இறையியலாளர்கள் கவனம் செலுத்தும்போது, இந்த காலத்தில் தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தன்னை முதன்மையாக நேரடி பேச்சு, தரிசனங்கள் மற்றும் கனவுகள் மூலம் வெளிப்படுத்தினார் என்று அவர்கள் பெரும்பாலும் கருதுகிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் வம்சாவளிகள் மீதான இனரீதியான கவனம் குறுகிப்போனதையும் அவர்கள் கவனிக்கிறார்கள். பிதாக்கள் பல பலிபீடங்களில் தேவனுக்கு ஆராதனை செய்ததை அவர்கள் காண்கிறார்கள். பிதாக்களின் வம்சாவளிகள் பெருகுவார்கள் என்கிற பிதாக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை அவர்கள் விவரித்தனர். பிதாக்களுக்கு தேசம் கொடுக்கப்படும் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டதன் முக்கியத்துவத்தை அவர்கள் கவனித்தார்கள். இவ்வகையான கவனிப்புகள் அந்தக் காலகட்டம் முழுவதிலும் முக்கியப் பங்காற்றிய உருவாக்க நிகழ்வுகளை அடையாளம் கண்டு, முற்பிதாக்களின் காலம் முழுவதையும் வகைப்படுத்துவதற்கான முயற்சிகளாக இருக்கின்றன.

அல்லது, எகிப்திலிருந்து கானான் தேசத்தை நோக்கியும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிப்பதை நோக்கியும் இஸ்ரவேலை வழிநடத்திய மோசேயின் காலமான "நியாயப்பிரமாணத்தின் காலம்" மீது வேத இறையியலாளர்கள் கவனம் செலுத்தும் போது, அவர்கள் பெரும்பாலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலம் தேவன் தன்னை முதன்மையாக வெளிப்படுத்தியதில் கவனம் செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் சிறிய இனத்தில் இருந்து எவ்வாறு ஒரு தேசிய மையமாக வளர்ந்தது என்பதையும் அவர்கள் கவனிக்கிறார்கள். ஆசாரிப்பு கூடாரம் எப்படிக் கட்டப்பட்டது என்பதையும் அங்கே ஆராதனை எப்படி மையப்படுத்தப்பட்டது என்பதையும் அவை விவரிக்கின்றன. இஸ்ரவேலர் அதிக எண்ணிக்கையில் வளர்ந்திருந்ததை அவர்கள் கவனிக்கிறார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள தேவன் இஸ்ரவேலரை எப்படி வழிநடத்தினார் என்பதை அவர்கள் காட்டுகின்றனர். இந்த வகையான நிகழ்வுகள் மோசேயின் காலத்தை ஒட்டுமொத்தமாக வகைப்படுத்தி, வேத வரலாற்றில் இந்த காலத்தின் ஒரு நிழல்படத்தை நமக்கு வழங்குகின்றன.

> இறையியலாளர்கள் பெரும்பாலும் தேவனுடைய திட்டத்தை பல்வேறு சகாப்தங்களாகவும் காலப்பிரிவுகளாகவும் பிரிப்பது பற்றி பேசுகிறார்கள்... புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை எவ்வாறு பிரிக்கிறது என்பதற்கு புதிய ஏற்பாட்டில் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. மத்தேயுவின் வம்சாவளியைப் பற்றி நீங்கள் நினையுங்கள். இது ஆபிரகாமுடன் தொடங்கி, தாவீது வரை செயல்படுகிறது. ஆபிரகாமிலிருந்து தாவீது வரை, தாவீதிலிருந்து இஸ்ரவேலர் சிறைப்பிடிக்கப்பட்ட காலம் வரை மற்றும் இஸ்ரவேலர் சிறைப்படிக்கப்பட்ட காலம் முதல் கிறிஸ்து வரை என இது பழைய ஏற்பாட்டு வரலாற்றைப் பார்க்கிறது. இந்த வழியில் தான் வேதம் பழைய ஏற்பாட்டு வரலாற்றை பிரிக்கிறது ... புதிய ஏற்பாட்டில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அதை பிரிக்கும் வேறு வழிகளும் உள்ளன. ரோமர் 5 மற்றும் 1 கொரிந்தியர் 15 இல் பவுலைப் பற்றி நினைத்துப் பாருங்கள். நீங்கள் ஆதாமையும் கிறிஸ்துவையும் பற்றி பேசலாம்; அதாவது நியாயப்பிரமாணத்திற்கு முன்பு மற்றும் நியாயப்பிரமாணத்திற்கு பிறகு என்று பேசலாம். எனவே, புதிய ஏற்பாடு இதைச் செய்ய பல வழிகளைக் காட்டுகிறது.
>
> – Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

ஒத்திசைவான நிழல்படங்களின் முடிவுகளுடன், வேத இறையியலாளர்கள் வழக்கமாக இரண்டாவது படிக்கு நகர்கிறார்கள், இதை நாம் மாறுதலின் சுவடு என்று அழைக்கலாம்.

## மாறுதலின் சுவடு

”மாறுதலின்” என்ற வார்த்தை வெறுமனே ”காலத்தின் வழியாக” என்று பொருள்படும். இது காலப்போக்கில் ஏதோ ஒன்று வளர்ந்த அல்லது மாறிய வழிகளைக் குறிக்கிறது. எனவே, தேவனுடைய செயல்களும் வார்த்தைகளும் வேறுபட்ட காலங்களில் ஒன்றுக்கொன்று இணையும் வழிகளில் ஒரு மாறுதலின் சுவடு கவனம் செலுத்துகிறது.

ஒரு மாறுதலின் சுவடு நிறுவும் செயல்முறையை பின்வரும் வழியில் நாம் சுருக்கமாகக் கூறலாம்: வேத வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களின் உருவாக்க நிகழ்வுகளை நாம் ஒன்றுடன் ஒன்று ஒப்பிடும் போது, ஒரு காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகளுக்கும் மற்றொரு காலகட்டத்தின் நிகழ்வுகளுக்கும் இடையே சீரமைப்புகள் அல்லது இணக்கங்கள் உள்ளன என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். வேத இறையியலாளர்கள் இந்த தொடர்புகளைக் கவனித்து, பழைய ஏற்பாட்டு விசுவாசத்தின் முன்னேற்றங்களை அவை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை விளக்குகிறார்கள்.

பழைய ஏற்பாட்டை வியாக்கியானம் செய்வதில் மிகவும் கடினமான ஆனால் வளமான அம்சங்களில் ஒன்று, அது வரலாற்றின் ஒரு காலகட்டத்தை மட்டும் விவரிக்கவில்லை என்பதே. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகளைத் தொடுகிறது. வரலாற்றின் இந்த நீண்ட நீட்சியில் தேவன் என்ன செய்தார் மற்றும் என்ன சொன்னார் என்பதை நாம் கற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய வெளிப்பாடுகள் பல வகையான இறையியல் வளர்ச்சிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பது ஒரு சாதாரண வாசகருக்கு கூட தெளிவாகத் தெரிகிறது.

ஆதாமின் உடன்படிக்கையின் காலத்தில் தேவன் வெளிப்படுத்தியவை நோவாவின் உடன்படிக்கையின் காலத்தில் வெறுமனே திரும்பத் திரும்பச் சொல்லப்படவில்லை. ஆபிரகாமின் உடன்படிக்கைக் காலத்தில் இருந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய வெளிப்பாடுகள் முன்பு வெளிப்படுத்தப்பட்டதை வெறுமனே திரும்பத் திரும்பச் சொல்லவில்லை. மோசேயின் உடன்படிக்கைக்கும் தாவீதின் உடன்படிக்கைக்கும் இது பொருந்தும். மேலும் புதிய உடன்படிக்கையின் போது தேவன் வெளிப்படுத்தியவைகள் தாவீதின் உடன்படிக்கைக்கு அப்பால் போனது.

ஆனால் இந்த யுகங்களில் வெளிப்பட்ட தெய்வீக வெளிப்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்படவில்லை. பிந்தைய காலங்களில் நிகழ்ந்த வெளிப்படுத்தல்கள் முந்தைய காலங்களில் இணைக்கப்பட்டு கட்டப்பட்டவை. வெவ்வேறு காலங்களில் இருக்கக்கூடிய வேறுபாடுகள் முதிர்ச்சி அல்லது இயற்கையான வளர்ச்சியைக் குறிக்கின்றன. பழைய ஏற்பாட்டு விசுவாசமானது, ஒரு விதை ஒரு மரக்கன்றுபோலவும், பின்னர் ஒரு சிறிய மரமாகவும், பின்னர் முதிர்ந்த மரமாகவும் வளர்வதைப் போல வளர்ந்தது. பழைய ஏற்பாட்டு வரலாற்றில் நிகழ்ந்த இந்த முன்னேற்றங்களை விவரிப்பது "மாறுதலின் சுவடு" என்று நாம் அழைக்கும் செயல்முறையாகும். நாம் என்ன சொல்கிறோம் என்பதை விளக்குவதற்கு, ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கை வலியுறுத்தியவற்றின் ஒரு அம்சத்தை மட்டும் கருத்தில் கொள்வோம். ஆபிரகாமுக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைப் பார்ப்போம். ஆதியாகமம் 15:18 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, "எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும் இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்" என்றார் (ஆதியாகமம் 15:18).

இந்தப் பத்தி சுட்டிக்காட்டுகிறபடி, தேவன் ஆபிரகாமுக்கு அவனுடைய சந்ததிக்காகக் கானான் தேசத்தை வாக்குத்தத்தம் செய்தார். இந்த நிகழ்வு முற்பிதாக்களின் காலத்தின் எந்தவொரு நன்கு உருவாக்கப்பட்ட ஒத்திசைவு புகைப்படத்திற்கும் மையமாக உள்ளது.

ஆனால் பழைய ஏற்பாட்டு வரலாற்றில் ஆபிரகாமுக்கு தேவனிடமிருந்து வந்த இந்த வாக்குத்தத்தத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு, நாம் மற்ற காலங்களையும் ஆராய வேண்டும். "கானான் தேசத்தைக் குறித்த இந்த வாக்குத்தத்தத்தின் பின்னணியை எந்த முந்தின நிகழ்வுகள் உருவாக்குகின்றன?" மற்றும் "இந்த வாக்குத்தத்தத்தின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர அதற்குப் பிந்தைய நிகழ்வுகள் எவ்வாறு சேவை செய்கின்றன?" என்று நாம் கேட்க வேண்டும். முதலாவதாக, ஆதாம் மற்றும் நோவாவுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கைகளை உள்ளடக்கிய வேத வரலாற்றின் ஆரம்ப காலகட்டமான ஆதிகால வரலாற்றைக் கவனியுங்கள். மற்றொரு பாடத்தில் நாம் பார்த்தபடி, ஆதாமின் காலத்தில், தேவன் முதலில் மனிதகுலத்தை தம்முடைய ராஜரீக ஆசாரியர்களாக ஸ்தாபித்து, முழுப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பூமியையும் ஆளும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆதியாகமம் 1:28 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்” என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 1:28).

இந்த நேரத்தில், மனிதகுலம் பாவம் செய்யவில்லை, ஆகையால் பூமியை ஆள்வது ஒப்பீட்டளவில் எளிதாக இருந்திருக்கும். ஆனால் மனிதகுலத்தின் முயற்சிகளைக் கடினமாக்கி, வேதனையானதாக ஆக்கியதன் மூலம் மனிதன் ஆளும் செயல்முறையை பாவம் சிக்கலாக்கியது. ஆதியாகமம் 3:17-19-ல் தேவன் தாமே ஆதாமிடம் இவ்வாறு சொன்னார்:

> பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் **(**ஆதியாகமம் 3:17-19**).**

ஆயினும், மனிதன் பாவத்தில் விழுந்த பிறகும்கூட, பூமியை ஆள மனிதர்கள் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். நோவாவின் நாளில் தேவன் உலகத்தை அழிக்குமளவுக்கு மனிதவர்க்கத்தின் துன்மார்க்கம் மிகப் பெரியதாக வளர்ந்த பின்னரும்கூட, தம்முடைய ராஜ்யத்தைப் பூமியின் எல்லைகள் மட்டும் பரப்பும்படி தேவன் தம்முடைய கட்டளையைக் காத்தார். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு உடனடியாக தேவன் ஆதியாகமம் 9:1-ல் நோவாவுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்:

> நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள் (ஆதியாகமம் 9:1).

இந்த பின்னணியைத் தெரிந்துகொள்வது, ஆபிரகாமுக்கு தேசம் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தமானது, ஆள வேண்டும் என்ற மனிதகுலத்தின் அழைப்பை நிறைவேற்றுவதில் ஒரு படி முன்னோக்கிய படி என்று புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. ஆதிகாலங்களில், பயனற்ற மற்றும் பாவம் நிறைந்த ஒரு உலகத்தில் ஆள்வதன் மூலம் பூமியில் தம்முடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப தேவன் தம்முடைய சாயலில் உள்ளவர்களை அழைத்தார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தைக் கைப்பற்றும்படி ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும் தேவன் அழைத்தபோது இந்த ஆளுகை மேலும் வெளிப்பட்டது. முற்பிதாக்களின் காலத்தில் நிறைவேறுதலின் இந்த படியானது தானாகவே ஒரு முடிவாக இருக்கவில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முற்பிதாக்களுக்கு தேசம் கொடுக்கப்படும் என்கிற வாக்குத்தத்தம் எதிர்காலத்தில் இன்னும் கூடுதலான நிறைவேறுதலை நோக்கிய ஒரு படியாகும். ஆதியாகமம் 22:18 இல் தேவன் இவ்வாறு ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் செய்தார்:

> உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 22:18).

ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை ஒரு காலடியாக கொடுத்தார் என்பதை இந்த வசனம் நமக்கு நினைவூட்டுகிறது. தேவன் முதலில் மனிதகுலத்திற்காக நியமித்ததைப் போலவே, அது அவர்கள் மீட்பு மற்றும் முழு பூமியின் மீது தேவனை மகிமைப்படுத்தும் ஆளுகையின் ஆசீர்வாதங்களை நோக்கி பூமியின் அனைத்து குடும்பங்களையும் வழிநடத்த வேண்டிய ஒரு தொடக்க புள்ளியாக இருக்க வேண்டியதாயிருந்தது.

இந்த காரணத்திற்காக, மனிதகுலத்தின் ஆளுகையைக் குறித்த நமது மாறுதலின் சுவடு மோசேயுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் காலத்தை நோக்கி முன்னேற வேண்டும். இக்காலகட்டத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் தேவன் இஸ்ரவேலை தேசத்தின் தாயகமாக ஸ்தாபித்து, யோசுவாவின் தலைமையில் நிகழ்ந்த சுதந்தரிப்பில் இஸ்ரவேலுக்கு தேசத்தைக் கொடுப்பதன் மூலம் பிதாக்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை முன்னெடுத்துச் சென்றார். யோசுவா 1:6-ல் தேவன் யோசுவாவுக்கு இவ்வாறு சொன்னார்:

> பலங்கொண்டு திடமனதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய் (யோசுவா 1:6).

இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைக் கைப்பற்றியபோது, மனிதகுலம் ஆளுகை செய்ய வேண்டும் என்ற முதல் அழைப்பும், ஆபிரகாமுக்கு தேசம் கொடுக்கப்படும் என்பது பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தமும் முன்னெடுக்கப்பட்டன.

யாத்திராகமம் மற்றும் சுதந்தரிப்பின் நாட்களில் இஸ்ரவேல் தேசத்தை சொந்தமாக்கியது தாவீதின் உடன்படிக்கையின் காலத்தில் மேலும் நிறைவேறியது. இஸ்ரவேலர் எதிரிகளுக்கு விரோதமாக தேசத்தைப் பாதுகாத்து, ஒரு பெரிய சாம்ராஜ்யமாக முதிர்ச்சியுற்ற காலம் அதுவாகும். தாவீதின் வீட்டார் தேசத்திற்கு வழங்கிய பாதுகாப்பானது, தேசத்தின் ஆரம்ப சுதந்தரித்தலை உறுதிப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்குமான மேலும் ஒரு படியாக இருந்தது. ஆனால் இந்தக் காலகட்டத்தின் ஆரம்பத்தில் இருந்த ஏகாதிபத்திய யதார்த்தங்கள் தாவீதின் வீட்டின் நீதியான ஆட்சியானது எதிர்காலத்தில் முழுப் பூமியையும் ஆளுகைக்கு எட்டும் ஒரு நாளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிர்பார்த்தன. தாவீதின் வீட்டில் இருந்த இந்த நம்பிக்கை சங்கீதம் 72:8-17-ல் வெளிப்படுத்தப்படுகிறது:

> ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்! … சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்! … மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்! (சங்கீதம் 72:8-17).

தாவீதின் உடன்படிக்கைக் காலத்தில் இருந்த நம்பிக்கையானது தாவீதின் வீட்டார் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பர் என்றும், ராஜ்யம் விரிவடைந்து, பூமியெங்கும் உண்மையுள்ளவர்களின் மீட்பையும் ஆளுகையையும் கொண்டுவருவதாகவும் இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, தாவீதின் வீட்டில் இந்த மகத்தான நம்பிக்கை இஸ்ரவேல் சிறைப்படுத்தப்பட்ட காலத்தில் சரிந்து, மறுசீரமைப்பு அடையத் தவறியது. மேலும் நிறைவேறுகிற நேரமாக இருப்பதற்குப் பதிலாக, அது உண்மையில் தோல்வியின் நேரமாக இருந்தது. இந்தக் காலம் பூமியின்மேல் தேவனுடைய ஜனங்களின் ஆளுகைக்கு ஒரு பயங்கரமான பின்னடைவாக மாறியது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவருடைய ஜனங்களுக்கு விரோதமாக வந்தது, அவர் வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யங்களை தங்கள் தேசத்திலிருந்து வெளியேயும் வேறு தேசத்தில் சிறைப்படுத்தப்படவும் அனுப்பினார்.

மேலும் இதை விட, அவரது இரக்கத்தின் காரணமாக, தேவன் பல இஸ்ரவேலர்களை மீட்டு தேசத்திற்குக் கொண்டு வந்தார். அவர் தாவீதின் வழித்தோன்றலாகிய செருபாபேலைத் தம்முடைய ஜனத்தின் அதிபதியாக எழுப்பி, பூமியின் ஜாதிகளின்மேல் அவனுக்கு மிகுந்த வெற்றியைக் கொடுத்தார். ஆகாய்ர் 2:7-9 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் … முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் … இவ்விடத்திலே சமாதானத்தைக் கட்டளையிடுவேன் (ஆகாய் 2:7-9).

இஸ்ரவேலர் உண்மையுள்ளவர்களாக இருந்திருந்தால், தாவீதினுடைய வீட்டாரின் ஆளுகையின் மூலம் மீட்பின் ஆசீர்வாதம் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியிருக்கும். ஆனால் மீண்டும் மீண்டும் தேசத்திற்குத் திரும்பிய இஸ்ரவேலர்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தார்கள், அதனால்

ஆசீர்வாதமும் தேசத்தின் விரிவாக்கமும் ஒருபோதும் நிறைவேறவில்லை. உண்மையில், மறுசீரமைப்பு ஒரு பரிதாபகரமான தோல்வியாக இருந்தது.

கிறிஸ்தவ வேத இறையியலாளர்கள் வேத வரலாற்றின் இறுதிக் கட்டமான புதிய உடன்படிக்கையில் வரலாற்றின் உச்சக்கட்டத்திற்கு திரும்புவது இந்த கட்டத்தில்தான். சிறைப்பட்டு நாடுகடத்தப்பட்டவர்களின் தோல்விகளையும், தோல்வியுற்ற மறுஸ்தாபிதத்தையும் மாற்றியமைக்கவும், பூமியின் மீது மீட்கப்பட்ட மனிதகுலத்தின் ஆளுகையின் நிறைவேற்றத்தைக் கொண்டுவரவும் தேவன் கிறிஸ்துவுக்குள் செயல்பட்டார் என்று புதிய ஏற்பாடு விசுவாசிகளுக்கு உறுதியளிக்கிறது. அவரைப் பின்பற்றுகிறவர்கள் அவரோடு சேர்ந்து பூமியை ஆளும்படிக்கு அந்நிய தேசத்தில் சிறைப்பட்ட இஸ்ரவேலின் சாபத்தை மாற்றியமைக்கவும் பாவத்திலிருந்து சுதந்திரத்தையும் மீட்பையும் கொண்டுவருவதற்காகவும் இயேசு வந்தார். இயேசு வெளிப்படுத்தின விசேஷம் 2:26 இல் இவ்வாறு கூறினார்:

> ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன் (வெளிப்படுத்தின விசேஷம் 2:26).

> நாம் மீண்டும் சென்று சபை வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் தேவன் எப்படி செயல்படுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும், கி.மு 2000 இல் தேவன் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தபோது கூட, தேவன் ஏற்கனவே ஆபிரகாமின் மூலமாக உலகத்திற்கு ஒரு ஆசீர்வாதத்தை நோக்கமாகக் கொண்டிருந்தார். தேவன் ஒரு மனிதனைத் தேர்ந்தெடுப்பதில், முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கப் போகிறார். எனவே, அவர் ஆபிரகாமுடன் செயல்படுவதன் மூலமும், ஆபிரகாமுடன் ஒரு உறவை உருவாக்குவதன் மூலமும், அவரை ஸ்தாபிப்பதன் மூலமும், முற்றிலும் தகுதியில்லாதவன் கிருபையைப் பெறுவது என்றால் என்ன என்பதைக் காண்பிப்பதன் மூலமும், பின்னர் ஒரு உடன்படிக்கை உறவில் அவரது குடும்பத்தின் மூலமும் அவரின் மூலமும் செயல்படுவதன் மூலமும் தேவன் அதைச் செய்தார், … அதனால், கிறிஸ்து யூதர்களுக்காகவோ ஆபிரகாமிற்க்காகவோ அல்லது அவரு**டை**ய சந்ததிகளுக்காகவோ மட்டும் வராமல் முழு உலகத்திற்காகவும் வரும் போது அவர் பூமி முழுவதுக்கும் தேவனாக இருக்கிறார் என்பதும் இப்படித்தான் அவர் மக்களுடன் உறவை ஏற்படுத்துகிறார் என்பதும் புரியும். இயேசு வந்தபோது, ஆபிரகாம் அந்த நாளுக்காகக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> காத்திருந்தார் என்று புதிய ஏற்பாட்டில் கூடச் சொல்லுகிற அந்த நம்பிக்கைகளையும் வாக்குத்தத்தங்களையும் அவர் நிறைவேற்றினார், அப்பொழுது அவரும் பூமியெங்கும் உள்ள எல்லா விசுவாசிகளும் அவரோடு உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்கிற நம்பிக்கையுடன் ஆபிரகாம் இன்னும் அந்த முழுமைக்காகக் காத்திருக்கிறார்.
>
> – Dr. க்ளே குவார்ட்டர்மேன்

இந்த சுருக்கமான உதாரணம், வரலாற்றின் வேதாகமப் பதிவின் மாறுதலின் சுவடுகள் பழைய ஏற்பாட்டைப் பற்றிய நுண்ணறிவுகளை நமக்குத் தரும் பல வழிகளில் ஒன்றை மட்டுமே விளக்குகிறது. பழைய ஏற்பாட்டின் மூலம் அது அறிவிக்கும் வரலாற்றைப் பார்ப்பது பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு முக்கிய வழியாகும்.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை ஒரு கண்ணாடியாகவும் ஒரு ஜன்னலாகவும் அணுகும்போது நமது ராஜாவின் வார்த்தையை எவ்வாறு பெற முடியும் என்பதை இப்போது நாம் வரைந்துள்ளோம், பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை ஒரு இலக்கிய உருவப்படங்களின் தொகுப்பின் சித்திரமாக நடத்துவதற்கு நம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

# நூற்தொகுப்பு ஒரு சித்திரம்

பழைய ஏற்பாட்டைப் பற்றி நன்கு அறிந்த அனைவரும் அது கருப்பொருள்கள் அல்லது தலைப்புகளின் பட்டியலாக நமக்கு வரவில்லை என்பதை அறிவார்கள். அது வரலாற்று நிகழ்வுகளின் நேரடியான பதிவும் அல்ல. இப்போது நாம் ஏற்கனவே இந்த பாடத்தில் கூறியது போல், பழைய ஏற்பாடானது அனைத்து வகையான கருப்பொருள்கள் பற்றிய அதிகாரப்பூர்வ நுண்ணறிவுகளையும் வரலாற்றின் உண்மையான பதிவுகளையும் நமக்கு வழங்குகிறது. ஆனால், முதலாவதாக, பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பானது இலக்கியப் படைப்புகளின் தொகுப்பு மற்றும் புத்தகங்களின் நூலகமாகும். நாம் பார்க்கப் போகிறபடி, வேதாகம ஆசிரியர்கள் இந்த வேத புத்தகங்களில் ஒவ்வொன்றின் உள்ளடக்கத்தையும் கட்டமைப்பையும் குறிப்பிட்ட வழிகளில் தேவனுடைய உடன்படிக்கைகளின் கொள்கைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் முன்னெடுத்துச் செல்ல பண்டைய இஸ்ரவேலர்களுக்குக் கற்பிப்பதற்காக எழுதினார்கள். இந்தக் காரணத்திற்காகவே, பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் முக்கியத்துவத்தைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பற்றிய பல நுண்ணறிவுகளை, பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் உருவப்படங்களாக அல்லது இலக்கிய உருவப்படங்களாக அணுகுவதன் மூலம், காலங்காலமாக தேவனுடைய உண்மையுள்ள ஜனங்கள் பல நுண்ணறிவுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

பல விஷயங்களில், பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை இந்த வழியில் அணுகுவது ஒரு கலை அருங்காட்சியகத்திற்குச் செல்வதைப் போன்றதாகும். நீங்கள் எப்போதாவது ஒரு அருங்காட்சியகம் அல்லது காட்சிக் கலையைப் பார்க்கச் சென்றிருந்தால், ஒளி, நிறம், கோடு, வடிவம் மற்றும் அமைப்பு ஆகியவற்றின் கலைஞர்களின் பயன்பாடு போன்ற விஷயங்களை சுட்டிக்காட்டும் ஒரு நிபுணரை அல்லது சக பார்வையாளரைப் பார்ப்பது அசாதாரணமானது அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். கலைஞர் "சொல்ல" முயற்சிப்பதை இந்த கலைக்கூறுகள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதைப் பற்றி அவர்கள் அடிக்கடி பேசுகிறார்கள். கலைஞரின் நோக்கம் மதரீதியானதா? அது அரசியல் ரீதியிலானதா? கலைஞர் ஏதோ ஒரு சீர்மையைப் புகழ்ந்துரைத்தாரா? சில தீய அல்லது அநீதியை அம்பலப்படுத்துகிறாரா? இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

இவ்வகையான கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு, கலை விமர்சகர்கள் பெரும்பாலும் ஓவியங்களின் வரைதிரைகளில் தோன்றுவதை விட அதிகமாகக் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். "கலைஞர்கள் யார்?" "கலைஞர்களின் அனுபவங்கள் அவர்களின் கலையை எவ்வாறு பாதித்தன?" என்று அவர்கள் கேட்கிறார்கள். "கலை யாருக்காகப் படைக்கப்பட்டது?" "மற்றவர்களின் நம்பிக்கைகள், செயல்கள் மற்றும் உணர்ச்சிகளை பாதிக்கும் வகையில் கலைஞர்கள் தங்கள் கலையை எவ்வாறு வடிவமைத்தனர்?" என்று மேலும் அவர்கள் கேட்கிறார்கள்.

அதே வழியில், பழைய ஏற்பாட்டின் புத்தகங்களை சித்திரங்களாக அணுகுவதைப் பற்றி நாம் பேசலாம். பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் பக்கங்களில் தோன்றுவதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களின் வாழ்க்கையிலும், அவர்களின் அசல் வாசகர்களின் தேவைகளின் மீது அவர்கள் செலுத்திய கவனத்திலும் கவனம் செலுத்துகிறோம். நாம் இந்த யுக்தியை "இலக்கிய பகுப்பாய்வு" என்று அழைக்கிறோம், ஏனெனில் அவர்கள் முதன்முதலில் எழுதிய தேவனுடைய மக்களின் நம்பிக்கைகள், செயல்கள் மற்றும் உணர்ச்சிகளை பாதிக்கிற வகையில் வேத எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களை எவ்வாறு வடிவமைத்தார்கள் என்பதில் கவனம் செலுத்துகிறது.

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களை இலக்கியப் பகுப்பாய்வு மூலம் சித்திரங்களாக எவ்வாறு கருதலாம் என்பதை ஆராய்வதற்கு, நாம் முன்பு எடுத்த அதே அணுகுமுறையைப் பின்பற்றுவோம். முதலாவதாக, பழைய ஏற்பாட்டை இந்த வழியில் அணுகுவதற்கான அடிப்படையை அல்லது நியாயத்தைப் பற்றி நாம் பேசுவோம். இரண்டாவதாக, இந்த யுக்தியின்

மையத்தைப் பார்ப்போம். கருப்பொருள் பகுப்பாய்வின் அடிப்படையை முதலில் பார்ப்போம்.

## அடிப்படை

இலக்கிய பகுப்பாய்வுக்கான அடிப்படையைக் காண பல வழிகள் உள்ளன, ஆனால் நமது நோக்கங்களுக்காக நாம் மீண்டும் இரண்டு காரணிகளை மட்டும் பார்ப்போம்: முதலாவதாக, வேதாகமத்தின் தன்மையைப் பார்ப்போம்; இரண்டாவதாக, வேத ஆசிரியர்கள் மற்றும் அதிகாரப்பூர்வ பாத்திரங்களின் எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். பழைய ஏற்பாட்டின் தன்மை பழைய ஏற்பாட்டு புத்தகங்களை இலக்கிய உருவப்படங்களாக அணுகுவதன் மதிப்பை எவ்வாறு குறிக்கிறது என்பதை முதலில் பார்ப்போம்.

### வேதாகமத்தின் தன்மை

இலக்கியப் பகுப்பாய்வு பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் குறைந்தபட்சம் மூன்று வெளிப்படையான அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது. முதலாவதாக, நூற்தொகுப்பில் உள்ள நூல்கள் புத்தகங்களில் அல்லது இலக்கிய அலகுகளில் நமக்கு வருகிறது. பழைய ஏற்பாடு என்பது 1000 ஆண்டுகளாக பண்டைய இஸ்ரவேலின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக எழுதப்பட்ட ஒப்பீட்டளவில் சுயாதீனமான சுருள்கள் அல்லது புத்தகங்களின் தொகுப்பாகும். ஒரு நவீன வேதாகமத்தின் பொருளடக்க அட்டவணையை விரைவாகப் பார்த்தால், அதில் 39 புத்தகங்கள் உள்ளன என்பதை அறியலாம். வேதத்தின் பெரும்பாலான மாணவர்கள் பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் பாரம்பரிய பட்டியலைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள், ஆனால் இந்த இலக்கிய அலகுகளைப் பற்றிய பல்வேறு அம்சங்களை நாம் குறிப்பிட வேண்டும்.

முதலாவதாக, பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் பெயர்களில் நாம் அதிகமானவைகளை வைக்கக்கூடாது, ஏனென்றால் அவை அசல் அல்ல. சில தலைப்புகள் பழைய யூத பாரம்பரியங்களிலிருந்து வருகின்றன, சில பழைய ஏற்பாட்டின் பண்டைய கிரேக்க மொழிபெயர்ப்பான செப்டுவஜின்ட்டிலிருந்து வருகின்றன , மேலும் நமது நவீன வேதாகமங்களில் உள்ள சில தலைப்புகள் மிகவும் பிந்தைய கிறிஸ்தவ மரபுகளிலிருந்து வருகின்றன.

1 மற்றும் 2 சாமுவேல், 1 மற்றும் 2 இராஜாக்கள் மற்றும் 1 மற்றும் 2 நாளாகமம் ஆகியவை முதலில் சாமுவேலின் புத்தகங்கள், ராஜாக்களின் புத்தகங்கள் மற்றும் நாளாகம புத்தகங்கள் என, மூன்று புத்தகங்களாக இருந்தன என்பதையும் நாம் குறிப்பிட வேண்டும். இதே வழியில், எஸ்றாவும் நெகேமியாவும் ஆரம்பத்தில் ஒரே புத்தகமாக இருந்தன என்று பல வியாக்கியான அறிஞர்கள் வாதிட்டிருக்கிறார்கள். இலக்கியப் பகுப்பாய்வுக்காக நாம் பழைய ஏற்பாட்டைப் படிக்கையில், நூற்தொகுப்பின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அலகுகள் முதலில் கொடுக்கப்பட்டிருந்தபடி அவற்றைக் கவனத்தில் கொள்ள விரும்புகிறோம்.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பைப் பற்றி நாம் சிந்திக்கையில், அதன் புத்தகங்கள் வரிசைப்படுத்தப்பட்டு அல்லது ஒழுங்குபடுத்தப்பட்டு இருப்பதை அதிகமாகச் சார்ந்திருக்காமல் இருப்பதும் முக்கியம். பழைய ஏற்பாட்டு நூல்களின் வரிசையானது வரலாறு முழுவதும் வேறுபட்டிருக்கிறது.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜோசிபஸின் காலத்தில் இருந்தே, யூத சமூகங்கள் பழைய ஏற்பாட்டை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரித்துள்ளன: நியாயப்பிரமாணம், அல்லது தோரா (תּוֹרָהה), தீர்க்கதரிசிகள் அல்லது நபிம் (נְבִאִים), மற்றும் எழுத்துக்கள், அல்லது கெத்துவிம் כְּתוּבִים)) ஆகியவையாகும். அதனால்தான், பல நூற்றாண்டுகளாக, யூத சமூகங்கள் எபிரெய வேதாகமத்தை தனக் என்று குறிப்பிடுகின்றன. அதில் ”த” என்பது மோசேயின் நியாயப்பிரமாணம் அல்லது முதல் ஐந்து புத்தகங்களைக் குறிக்கிறது. ”ன” என்பது தீர்க்கதரிசிகளையும், ”க்” என்பது எழுத்துக்களையும் குறிக்கிறது. புதிய ஏற்பாடு அதன் சொந்த வழிகளில் இந்த பாரம்பரியத்தை பிரதிபலிக்கிறது, சில நேரங்களில் முழு பழைய ஏற்பாட்டையும் ”நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள்” என்று குறிக்கிறது அல்லது ”நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகள் மற்றும் எழுத்துக்களில் முதல் புத்தகமான சங்கீதங்கள்” என்று குறிப்பிடுகிறது.

ஆனால் மொத்தத்தில், கிறிஸ்தவ சபையானது கிரேக்க பழைய ஏற்பாடான செப்டுவஜின்ட்டின் படி பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் புத்தகங்களை வரிசைப்படுத்தியுள்ளது. தனக்கின் வரிசையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, நாம் வழக்கமாக முதல் ஐந்து புத்தகங்களை மோசேயின் ஆகமங்கள் என்றும், எஸ்தர் முதல் யோசுவா வரையுள்ள புத்தகங்களை வரலாற்று புத்தகங்கள் என்றும், யோபு முதல் சாலொமோனின் உன்னதப்பாட்டு வரையுள்ள புத்தகங்களை கவிதை நூல்கள் என்றும், ஏசாயா முதல் மல்கியா வரையுள்ள புத்தகங்களை தீர்க்கதரிசன புத்தகங்கள் என்றும் வரிசைப்படுத்துகிறோம்.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பினுடைய புத்தகங்களின் வரிசையில் உள்ள இந்த வேறுபாடுகள் பழைய ஏற்பாட்டுக்கான இலக்கிய அணுகுமுறைகளுக்கு மிக முக்கியமான ஒன்றை வெளிப்படுத்துகின்றன. பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் ஆரம்பத்தில் ஒப்பீட்டளவில் சுயாதீனமான இலக்கியப் படைப்புகளாக இருந்தன. எனவே, பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை ஒரு சித்திரமாக நாம் அணுகும்போது, முதலாவதாக, ஒவ்வொரு புத்தகத்தையும் ஒரு அலகாகப் புரிந்துகொள்வதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் ஆதியாகமம் புத்தகத்தை ஆதியாகம புத்தகமாக அதன் சொந்த தனித்துவமான வடிவமைப்பு மற்றும் இறையியல் அக்கறைகளுடன் பார்க்கிறோம்; யாத்திராகமம் புத்தகத்தையும் மற்ற புத்தகங்களையும் அப்படியே பார்க்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சங்கீதம் அல்லது சங்கீதம் புத்தகம் போன்றவைகளைத் தவிர, வேதாகமத்தில் உள்ள அடிப்படை இலக்கிய அலகு பெரும்பாலும் வேத புத்தகமாகும். எழுத்தாளர்கள் அடிப்படையில் புத்தகங்களைத் திட்டமிட்டு எழுதுகிறார்கள். வேத பகுதிக்கு முன்னும் பின்னும் உள்ள பத்திகளுடன் மட்டும் சூழல் நின்றுவிடவில்லை என்பது நிச்சயமாக மிகவும் முக்கியமானதாகும். ஆனால் உண்மையில், ஒரு வேத பகுதி எவ்வாறு செயல்படுகிறது என்பதையும், ஒரு பகுதியாக இருக்கும் முழு புத்தகத்திற்குள் அது என்ன பங்கு வகிக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.
>
> – Dr. டேவிட் ஆர். பாவுர்

இலக்கியப் பகுப்பாய்வின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் இரண்டாவது பழைய ஏற்பாட்டுப் பண்பானது, பழைய ஏற்பாட்டு நூல்கள் அதிநவீன இலக்கியப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன என்பதாகும். சில எழுத்துக்களுக்கு மற்றவைகளை விட அவற்றின் இலக்கியக் கலைத்திறனில் அதிக கவனம் தேவை என்பது பொதுவான அனுபவத்திலிருந்து நமக்குத் தெரியும். எடுத்துக்காட்டாக, ஒரு கடையில் கவிதை நடையில் பொருட்களின் பட்டியலைப் பார்த்தால் அது விசித்திரமாக இருக்கும். ஒரு விரைவான சிறு குறிப்பு பொதுவாக ஒரு விரிவான நாவலைப் போல நுணுக்கமாக வடிவமைக்கப்படுவதில்லை. நாம் எளிய படைப்புகளைப் பார்க்கும்போது, பொதுவாக அவைகளின் இலக்கியப் பண்புகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் நாம் ஒரு அதிநவீன நாவல் அல்லது கவிதையைப் படிக்கும்போது, நாம் நுண்ணறிவுகளைப் பெற விரும்பினால், ஆசிரியரின் இலக்கிய நுட்பங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வேதாகம காலங்களில் மற்ற கலாச்சாரங்களில் இருந்து எழுதப்பட்ட படைப்புகளை பரவலாக கண்டுபிடித்துள்ளார்கள். நம்மிடம் நிருபங்கள், பட்டியல்கள், ரசீதுகள் மற்றும் அதிக இலக்கிய சிக்கல்களை வெளிப்படுத்தாத படைப்புகள் உள்ளன. ஆனால் பண்டைய கிழக்கத்திய நாடுகளில் இருந்து அற்புதமான சிக்கலான இலக்கியப் படைப்புகளும் நம்மிடம் உள்ளன. வேதாகம நாட்களின் பெரிய கலாச்சாரங்கள் விரிவான தொன்மங்கள் மற்றும் புராணக்கதைகள், சிக்கலான சட்ட ஆவணங்கள் மற்றும் சிக்கலான சடங்கு நூல்களைக் கொண்டிருந்தன. இவை மிகுந்த கவனத்துடன் வடிவமைக்கப்பட்ட இலக்கியப் படைப்புகளாகும்.

பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் தான் பண்டைய உலகத்திலிருந்து நாம் அறிந்த மிக விரிவான இலக்கிய படைப்புகளாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் பண்டைய உலகின் மிகப்பெரிய கலாச்சாரங்களின் மிகச்சிறந்த இலக்கியத்தின் கலைத்திறனுக்கு சமமாகவோ அல்லது அவைகளை மிஞ்சும் வகையிலோ இருக்கின்றன என்பதற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பெரும்பாலான தரவுகள் சான்றுகளாகும். பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் இந்த அதிநவீன இலக்கியப் பண்புகளைப் புரிந்துகொள்வது, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் வாசகர்களின் வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்த முயன்றனர் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

பழைய ஏற்பாட்டின் இலக்கியப் பகுப்பாய்வை நாம் தொடர வேண்டிய மூன்றாவது காரணம், அதன் இலக்கிய வகைகள் ஆகும். பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பானது ஒவ்வொரு பக்கத்திலும் ஒரே வகையான எழுத்து உள்ள ஒரு தட்டையான நிலப்பரப்பு அல்ல. அதற்கு பதிலாக, இது மலைகள், ஆறுகள், ஏரிகள், வளமான சமவெளிகள், பாலைவனங்கள் மற்றும் பெருங்கடல்கள் அடங்கிய மாறுபட்ட நிலப்பரப்பைப் போன்றதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் பல்வேறு வகையான இலக்கிய நடைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

ஆதியாகமம், யோசுவா, நியாயாதிபதிகள் மற்றும் ரூத் போன்ற சில பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் பிரதானமாக கதைகளாக உள்ளன. இந்த புத்தகங்களில் சுருக்கமான வம்சாவளிகள், பட்டியல்கள், கவிதைகள், அத்துடன் ஆராதனை மற்றும் சமூக அறிவுறுத்தல்கள் ஆகியவை உள்ளன. பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பில் உள்ள மற்ற புத்தகங்கள் சங்கீதம், யோபு போன்ற பிரதானமாக கவிதை புத்தகங்களும் பல தீர்க்கதரிசன புத்தகங்களுமாகும். பிரசங்கி மற்றும் மல்கியா போன்ற மற்ற புத்தகங்கள் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த உரைநடையாக உள்ளன. இதற்கும் மேல், சொற்பொழிவுகள் உபாகமம் புஸ்தகத்தை வகைப்படுத்துகின்றன.

பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் இலக்கிய நடைகளில் எழுதப்பட்டன என்பதை உணர்ந்துகொள்வது முக்கியம், ஏனென்றால் ஒவ்வொரு இலக்கிய நடையும் அதற்கே உரிய தனிப்பட்ட ரீதியில் வாசகர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துபவையாக இருந்தன. பிரமாணம் பிரமாணமாக வாசிக்கப்பட வேண்டும்; சொற்பொழிவுகளை சொற்பொழிவுகளாகவும், கதைகளை கதைகளாகவும், கவிதைகளை கவிதைகளாகவும், பழமொழிகளை பழமொழிகளாகவும், தரிசனங்களை தரிசனங்களாகவும், தீர்க்கதரிசனங்களை தீர்க்கதரிசனங்களாகவும் வாசிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் முதலில் தேவனுடைய மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் எவ்வாறு வடிவமைக்கப்பட்டன என்பதைக் கண்டுபிடிப்பதற்கு, ஒவ்வொரு பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தையும் வகைப்படுத்தும் இலக்கிய நடைகளை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வேதவாக்கியத்தின் தன்மையே இலக்கியப் பகுப்பாய்வின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் மற்றொரு வழியாகும்.

> யாரோ ஒருவர் படிக்கும் ஒரு வேத பகுதியின் இலக்கிய நடையைப் புரிந்துகொள்வது முக்கியம், ஏனென்றால் அது சரியாக வியாக்கியானப்படுத்துவதற்கு நமக்கு உதவுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இது வசனத்தைப் பற்றிய நல்ல கேள்விகளைக் கேட்க நமக்கு உதவுகிறது. கவிதை, கதையாடல், பிரமாணப் பிரிவுகள் போன்ற இலக்கிய நடைகள் நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகின்றன. வேத பகுதியைக் குறித்து கேள்விகளைக் கேட்க இது நமக்கு உதவுகிறது. அது ஒரு கதையாடலாக இல்லாமல் அது ஒரு கவித்துவமான உரையாக இருந்தால், வெவ்வேறு கேள்விகளை நாம் கேட்போம். ஒரு வரலாற்று நிகழ்வு எவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கான பிரத்தியேகங்களை விரிவாக விவரிக்க கவிதை நூல்கள் பெரும்பாலும் முயற்சிப்பதில்லை. அவர்கள் பெரும்பாலும் மிகவும் உருவகமான மொழியில் விவரிக்கின்றனர்; அவர்கள் உருவகங்களைப் பயன்படுத்துகிறார்கள். எனவே, நீங்கள் இந்த வெவ்வேறு வகையான இலக்கிய நடைகளை வெவ்வேறு வழிகளில் விளக்குகிறீர்கள்.
>
> – Dr. ஜிம் ஜோர்டான்

வேதாகமத்தின் தன்மையுடன் சேர்த்து, இலக்கிய பகுப்பாய்வுவானது வேதாகம உதாரணங்கள், வேதாகம ஆசிரியர்களைக் குறித்த எடுத்துக்காட்டுகள் மற்றும் பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை இந்த வழியில் நடத்திய அதிகாரப்பூர்வ பாத்திரங்களைக் குறித்த எடுத்துக்காட்டுகளையும் அடிப்படையாகக் கொண்டது.

## வேதாகம உதாரணங்கள்

ஒவ்வொரு முறையும் வேதாகம எழுத்தாளர்களும் பாத்திரங்களும் வாசகர்களை நோக்கிய ஆசிரியரின் நோக்கங்களின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை அணுகும்போது, அவர்கள் ஒரு வகையான இலக்கிய பகுப்பாய்வைப் பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக, உபாகமம் 24:1-ல் விவாகரத்தைப் பற்றி மோசே எழுதியதை அவர் விவரித்தபோது, இயேசு இலக்கிய பகுப்பாய்வில் கவனம் செலுத்தினார். மாற்கு 10:4-ல், சில பரிசேயர்கள் விவாகரத்தைப் பற்றிய இயேசுவின் கண்ணோட்டத்தை பின்வரும் வார்த்தைகளால் சவாலுக்கு உட்படுத்தினார்கள்:

> தள்ளுதற்சீட்டை எழுதிக்கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே உத்தரவுகொடுத்திருக்கிறார் (மாற்கு 10:4).

ஒரு மனிதன் ஒரு பெண்ணுக்கு விவாகரத்துச் சான்றிதழைக் கொடுத்து விட்டால், நடைமுறையில் எந்தக் காரணத்திற்காகவும் ஒரு பெண்ணை விவாகரத்து செய்யலாம் என்ற போதனையாக கொடுப்பதற்கு உபாகமம் 24:1 யை

இயேசுவின் நாளில் வாழ்ந்த சில பரிசேயர்கள் வியாக்கியானம் செய்தனர். ஆனால் மோசேயின் நோக்கங்கள் மற்றும் அவருடைய வாசகரின் நிலைமையின் வெளிச்சத்தில் இந்த வேத பகுதியைப் படிப்பதன் மூலம் இயேசு இந்தப் பொய்யான வியாக்கியானத்தை திருத்தினார். மாற்கு 10:5 இல் இயேசு இவ்வாறு கூறினார்:

> உங்கள் இருதயகடினத்தினிமித்தம் இந்தக் கட்டளையை உங்களுக்கு எழுதிக்கொடுத்தான் (மாற்கு 10:5).

இஸ்ரவேலரின் கடினப்படுத்தப்பட்ட இருதயங்களுக்கு ஒரு சலுகையாக மோசே விவாகரத்தை அனுமதித்ததாக இயேசு சுட்டிக்காட்டினார்.

இங்கே நமது நோக்கங்களுக்காக, உபாகமம் 24-ன் வசனத்தை அதன் வரலாற்றுச் சூழலில் இருந்து வெளியே எடுக்க இயேசு மறுத்துவிட்டார் என்பதை உணர வேண்டியது முக்கியம். மோசேயை ஆசிரியராகவும், பூர்வ இஸ்ரவேலரைத் தம்முடைய வாசகர்களாகவும் அவர் அறிந்திருந்ததன் வெளிச்சத்தில் அந்தப் வேத பகுதியை அவர் பார்த்தார். மோசேயின் கடினப்படுத்தப்பட்ட வாசகரை நோக்கிய அவருடைய நோக்கங்களைப் பற்றி பரிசேயர்கள் எண்ணிப்பார்க்க தவறிவிட்டனர். எனினும், இந்தக் காரணிகளின் முக்கியத்துவத்தை இயேசு அறிந்தவராக, மோசேயின் ஒழுங்குமுறை உண்மையில் அவர்களுடைய பாவத்திற்கு ஒரு சலுகையே தவிர, ஒரு இலட்சியமல்ல என்ற முடிவுக்கு வந்தார்.

இலக்கியப் பகுப்பாய்வின் மற்றொரு எடுத்துக்காட்டு கலாத்தியர் 4:22-24 இல் காணப்படுகிறது. ஆபிரகாமின் மனைவி சாராள், அவளுடைய குமாரனாகிய ஈசாக்கு, சாராளுடைய வேலைக்காரியாகிய ஆகார், அவளுடைய குமாரனாகிய இஸ்மாவேல் ஆகியோரைப் பற்றிய பழைய ஏற்பாட்டுக் கதைகளைப் பற்றி பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> அடிமைப்பெண்ணின் மூலமாக ஒரு குமாரனும் சுயாதீன ஸ்த்ரீயின் மூலமாக ஒரு குமாரனுமாக ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அடிமையின் குமாரன் மாம்சத்தின்படி பிறந்தான், அதே நேரத்தில் சுதந்திர ஸ்திரீயின் குமாரன் வாக்குத்தத்தத்தத்தின் மூலம் பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம் (கலாத்தியர் 4:22-24).

வசனம் 24 இல், சாராள் மற்றும் ஈசாக்குடன் ஆபிரகாமுடைய தொடர்பையும் ஆகார் மற்றும் இஸ்மவேலுடன் ஆபிரகாமுடைய தொடர்பையும் பற்றிய ஆதியாகமத்தின் பதிவு ”உருவகமாக” விளக்கப்படலாம், ஏனெனில் அவை ”இரண்டு உடன்படிக்கைகளை” பிரதிநிதித்துவம் செய்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆபிரகாம் சாராளுடனும் ஆகாருடனும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தொடர்பு கொண்ட விபரங்கள் ஆதியாகமத்தின் அசல் இஸ்ரவேல் வாசகர்களுக்காக ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்பதை பவுல் புரிந்துகொண்டார்.

ஒரு புறம் சாராள் மற்றும் ஈசாக்கின் வழி, மறுபுறம் ஆகார் மற்றும் இஸ்மவேலின் வழி என ஆபிரகாம் தேவனுடன் தொடர்புகொள்வதற்கான இரண்டு வழிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு இருந்தது என்பதை ஆதியாகமத்தின் பதிவு தெளிவுபடுத்தியது. ஒரு புறம், ஆபிரகாம் சாராள் மூலமாக பிறக்கப்போகும் ஒரு பிள்ளையைப் பற்றிய வாக்குத்தத்தத்தைக் காப்பாற்ற தேவனை விசுவாசித்த போது தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்தார். தேவனையும் அவருடைய வாக்குத்தத்தத்தையும் நம்பியிருக்கும் இந்தப் பாதை கடினமாக இருந்தது, ஆனால் அது தேவனுடைய ஆசீர்வாதத்திற்கான வழியாக இருந்தது. ஆனால் மறுபுறம், ஆபிரகாம் எகிப்திய வேலைக்காரியாகிய ஆகாரின் மூலம் ஒரு குழந்தையைப் பெறுவதற்கான தனது சொந்த முயற்சிகளை நம்பியபோது தேவனுக்கு துரோகம் செய்தார். அவருடைய சொந்த முயற்சிகளை நம்பியிருந்த இந்தப் பாதையானது தேவனுடைய நியாயத்தீர்ப்பை ஆபிரகாமிற்கு எதிராகக் கொண்டு வந்தது.

ஆபிரகாமின் வாழ்க்கையைப் பற்றி மோசே எழுதியபோது, ஆபிரகாம் இஸ்ரவேலரின் பார்வையாளர்களுக்காக ஆபிரகாமுடைய தேர்ந்தெடுத்தலின் மகத்தான முக்கியத்துவத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். இஸ்ரவவேல் வாசகர்கள் அவர்களுடைய நாளில் இரண்டு வாழ்க்கை முறைகளுடன் தொடர்பு படுத்துவதற்காக ஆதியாகமத்தில் இந்தக் கதைகளை அவர் சொன்னார். ஒரு புறம், பல சந்ததியினருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்காக கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தேவனைச் சார்ந்திருக்கும்படி தன் அசல் வாசகர்களை அழைப்பதற்காக சாராளையும் ஆகாரையும் பற்றி மோசே எழுதினார். தேவனையும் அவருடைய வாக்குத்தத்தத்தையும் நம்புவது கடினமாக இருந்தது, ஆனால் அது ஆசீர்வாதத்தின் வழியாக இருந்தது. மறுபுறம், ஆபிரகாம் எகிப்திய வேலைக்காரியாகிய ஆகாரிடம் திரும்பியதைப் போலவே, எகிப்துக்காக ஏங்குவதன் மூலம் மனித முயற்சிகளை நம்ப வேண்டாம் என்று மோசே இஸ்ரவேலரை கேட்டுக்கொண்டார். பின்வாங்குவது இஸ்ரவேலுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு வழிவகுக்கும்.

மோசேயின் அசல் நோக்கத்தின் மீதான இந்த வலியுறுத்தலைத் தொடர்ந்து, பவுல் இந்தக் கதைகளை கலாத்தியாவில் உள்ள சபைகளின் நிலைமைக்கு அப்பியாசப்படுத்தினார். பவுலிடமிருந்து வந்த உண்மையான சுவிசேஷத்திற்கும் எருசலேமின் பிரதிநிதிகளிடமிருந்து தங்கள் சபைகளுக்கு வந்த ஒரு தவறான சுவிசேஷத்திற்கும் இடையில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் நிலையில் கலாத்தியர்கள் இருந்தனர். உண்மையான சுவிசேஷம் என்னவென்றால், இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புவதன் மூலம் வருகிறது. கள்ள சுவிசேஷமானது

தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைக்காமல், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிற மனித முயற்சி தான் இரட்சிப்பின் வழி என்று மக்களைத் திருப்பியது.

கலாத்தியரில் பவுல் சொன்னது போல, தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைக்கிற உண்மையான சுவிசேஷத்தைப் பின்பற்றுகிறவர்கள் சாராளின் பிள்ளைகளும் வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளுமாயிருக்கிறார்கள். ஆனால் கள்ள சுவிசேஷத்தைப் பின்பற்றுகிறவர்கள் ஆகாரின் பிள்ளைகள், இரட்சிப்பினுடைய வரத்தின் சுதந்தரவாளிகள் அல்ல. தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைக்கிற உண்மையான சுவிசேஷம் ஆசீர்வாதங்களை நோக்கி வழிநடத்துகிறது என்றும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிதல் என்ற கள்ள சுவிசேஷம் நியாயத்தீர்ப்புக்கு மட்டுமே வழிநடத்துகிறது என்றும் பவுல் தெளிவுபடுத்தினார். மோசே தனது அசல் வாசகர்களுக்காக தனது வரலாற்றுப் பதிவை வடிவமைத்த விதங்களில் அவரது கவனமாகிய இலக்கியப் பகுப்பாய்வில் பவுலுக்கு இருந்த அக்கறையே- கலாத்தியா சபைகளின் நிலைமைக்கு ஆதியாகமத்தைப் பயன்படுத்துவதற்கு அவரை இட்டுச்சென்றது.

பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை ஒரு சித்திரமாகக் கருதுவதற்கான சில அடிப்படைகளை நாம் இப்போது பார்த்திருக்கிறோம், இலக்கியப் பகுப்பாய்வின் மீது கவனத்தைத் திருப்ப வேண்டும். பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை நோக்கிய இந்த யுக்தியின் முக்கிய அக்கறைகள் யாவை?

## நம் கவனம்

சுவிசேஷ கிறிஸ்தவர்கள் "இலக்கண-வரலாற்று விளக்கவுரை" என்று வேதாகமத்தை விளக்குவதற்கான சரியான வழியை அடிக்கடி குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் விளக்கவுரை அல்லது வேத வியாக்கியானமானது, முதல் இடத்தில், இலக்கணத்தில் அல்லது வேத பகுதி வடிவமைப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பது அர்த்தமாகும். ஆனால் அதே நேரத்தில், விளக்கவுரையானது வரலாற்று ரீதியாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம், ஒரு வேத பகுதியின் இலக்கணமானது நூலாசிரியரின் வரலாற்று அமைப்புகளின் வெளிச்சத்திலும், அந்த வேத பகுதியின் அசல் வாசகர்களின் வெளிச்சத்திலும் பார்க்கப்பட வேண்டும் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். ஏதோ ஒரு அளவிற்கு, இந்தக் காரணிகள் கருப்பொருள் மற்றும் வரலாற்றுப் பகுப்பாய்வுகளுக்கான பொறுப்புள்ள அணுகுமுறைகளில் பார்வைக்கு வருகின்றன. ஆனால் அவை இலக்கியப் பகுப்பாய்வில் குறிப்பாக முக்கியமானவை.

இலக்கியப் பகுப்பாய்வின் மீதான கவனத்தைக் காண, நாம் மூன்று காரியங்களைப் பார்ப்போம். முதலாவதாக, எழுத்தாளர்; இரண்டாவதாக, அசல் வாசகர்கள்; மூன்றாவதாக, நாம் பார்வையில் வைத்திருக்கும் ஆவணம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அல்லது வேத பகுதி. பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் எழுத்தாளர்களைக் கருத்தில் கொள்வதன் முக்கியத்துவத்தை முதலில் சிந்திப்போம்.

## எழுத்தாளர்

முழு பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் எழுத்தையும் தேவன் வேதத்தை அருளி, மேற்பார்வையிட்டார் என்பதை கிறிஸ்துவின் சீஷர்கள் புரிந்துகொள்கிறார்கள். ஆனால் இந்த தொடரில் நாம் முன்பு பார்த்தபடி, இந்த உத்வேகம் இயற்கையானதாக இருந்தது. தேவன் தாம் தெரிந்துகொண்ட மனித எழுத்தாளர்களின் பின்னணிகள், எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நோக்கங்களைப் பயன்படுத்தி நூற்தொகுப்பின் புத்தகங்களை உருவாக்கினார். எனவே, நாம் பழைய ஏற்பாட்டை வாசிக்கையில் மனிதர்களைக் குறித்தும் அக்கறை காட்ட வேண்டும். இலக்கியப் பகுப்பாய்வின் இந்த அம்சத்தை நாம் இரண்டு வழிகளில் பார்ப்போம். ஒரு புறம், நாம் பல அபாயங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும், மறுபுறம், பழைய ஏற்பாட்டில் இந்த அணுகுமுறையின் பல நன்மைகளை நாம் பார்க்க வேண்டும்.

முதலாவதாக, பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் மனித எழுத்தாளர்களைப் பற்றி நாம் அதிகமாக ஊகிக்கும்போது நாம் கடுமையான ஆபத்துக்களை எதிர்கொள்கிறோம். கடந்த காலத்தில், பல வியாக்கியான அறிஞர்கள் உளவியல் மற்றும் சமூகவியல் ஊகங்களின் வலைகளில் சிக்கிக் கொண்ட வழிகளில் எழுத்தாளர்கள் மீது கவனம் செலுத்த முனைந்தனர். எழுத்தாளரின் துல்லியமான அடையாளம், அவர் எதிர்கொண்ட குறிப்பிட்ட சூழ்நிலைகள் மற்றும் அவரது இறையியல் உந்துதல்களின் விவரங்கள் ஆகியவற்றைப் பற்றி அதிகமாக அனுமானிப்பதன் மூலம் அவர்கள் இதைச் செய்தனர். இந்த வகையான பிரச்சனைகள் எவ்வளவு முக்கியமானவையாக இருந்தாலும், நமக்குத் தெரிந்ததைத் தாண்டிச் சென்றால், நமது விளக்கங்களானது ஊகத்தின் மீது அதிகமாகச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படும். எழுத்தாளரின் மீதான இந்த வகையான அதிகப்படியான முக்கியத்துவம் ஒரு எழுத்தாளரின் நோக்கங்களைப் பற்றிய நமது மறுகட்டமைப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் ”வேண்டுமென்றே தவறான கருத்து” என்று அழைக்கப்படலாம்.

ஆனால் இரண்டாவதாக, வேதாகம ஆசிரியர்கள் மீது கவனமாகவும் பொறுப்புடனும் கவனம் செலுத்துவது நமக்கு பல நன்மைகளை வழங்குகிறது. அவர்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள விரும்பும் அளவுக்கு நமக்குத் தெரியாமலிருக்கலாம், ஆனால் அவர்களுடைய எழுத்துக்களைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும் பல விஷயங்களை நாம் இன்னும் புரிந்துகொள்ள முடியும். அவர்களுடைய அடையாளங்களைப் பற்றியும், அவர்களின் சூழ்நிலைகளைப் பற்றியும், அவர்களின் அடிப்படை இறையியல் நோக்கங்களைப் பற்றியும் நாம் பல்வேறு விதமான பொது அறிவைப் பெற முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஒரு வேதாகம புத்தகத்தின் ஆசிரியரைப் பற்றிய தகவல்கள் அதன் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஏனென்றால், சர்வாதிகாரமுள்ள தேவன் மட்டுமே செயல்படுக் கூடிய வழியில், பரிசுத்த ஆவியானவர் மனித தனிநபர்களை அவர்களின் ஆளுமைகளில், அனுபவங்களின் பின்னணியில், அவர்களின் பிழையில்லாத வார்த்தையை வழங்கப் பயன்படுத்தினார். அவர் அவருடைய வார்த்தையைப் பேசுவதற்கான மனித எழுத்தாளரை எவ்வாறு உருவாக்கினார் என்பதைப் பற்றி நாம் சில உணர்வுகளைப் பெறும்போது, அது அந்த வசனத்தைப் பற்றிய நமது புரிதலை வளப்படுத்துகிறது. தாவீதின் மனந்திரும்புதலின் சங்கீதமும் பத்சேபாளை எடுத்துக்கொள்வதன் மூலம் தனது உண்மையுள்ள சிப்பாயான உரியாவுக்கு எதிராக பாவம் செய்ததை அவர் அங்கீகரித்ததையும், அதை அறிக்கையிட்டதையும் பற்றியதான சங்கீதமுமான சங்கீதம் 51 யை நான் நினைவு கூறுகிறேன். தேவனுக்கு பிரியமான ஒரு மனிதன், மோசமாகப் பாவஞ்செய்து, தேவனிடத்தில் மன்னிப்பைக் காண்கிற ஒரு ராஜாவின் வாக்குமூலமாக நாம் அதைக் காணும்போது, அந்த முழு சங்கீதமும் உயிர்ப்புடன் வருகிறது.
>
> – Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

நாம் என்ன சொல்கிறோம் என்பதை விளக்குவதற்கு, இரண்டு முக்கியமான பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களைப் பற்றி நாம் அறிந்திருப்பதைப் பார்ப்போம்: 1 மற்றும் 2 இராஜாக்களின் ஆசிரியர் மற்றும் 1 மற்றும் 2 நாளாகமங்களின் ஆசிரியர். இந்த எழுத்தாளர்கள் யார் என்று நமக்குத் தெரியாது. அவர்களின் பெயர்கள் அல்லது அவர்கள் எப்போது எழுதினார்கள் என்பது நமக்குத் தெரியாது. அவர்களின் உளவியல் போக்குகளைப் பற்றி நமக்கு நிச்சயமாக அதிகம் தெரியாது. எனவே, அவர்களின் புத்தகங்களை நாம் வியாக்கியானம் செய்யும்போது இந்த வகையான பரிசீலனைகளை பெரிதும் நம்பியிருப்பது, ஊகங்களின் மீது நமது வியாக்கியானங்களைக் கட்டமைக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

அதே நேரத்தில், இந்த இரண்டு ஆசிரியர்களையும் பற்றிய மதிப்புமிக்க தகவல்களை பழைய ஏற்பாட்டிலிருந்தே நாம் பெற முடியும். உதாரணமாக, இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைப்படுத்தப்பட்டபோது, ராஜாக்களின் ஆசிரியர் எழுதினார் என்பதை நாம் அறிவோம். 2 ராஜாக்கள் 25:27-30 இன் கடைசிக் காட்சிகள், யோயாக்கீன் பாபிலோன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, கி.மு. 562-க்குப் பிறகு, ஆசிரியர் எழுதியதை தெளிவாகக் காட்டுகிறது. ஆனால்,

கி.மு. 538-ல் யூதர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்ப அனுமதித்த கோரேசின் முக்கியமான கட்டளையை ஆசிரியர் ஒருபோதும் குறிப்பிடவில்லை. எனவே, பாபிலோனில் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலர் விடுதலையாவதற்கு முன்பாகவே ராஜாக்களின் புஸ்தகம் ஏறக்குறைய நிச்சயமாய் முடிக்கப்பட்டு விட்டது.

இதற்கு மாறாக, நாளாகமத்தின் ஆசிரியர் இஸ்ரவேல் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு எழுதினார். 1 நாளாகமம் 9-ல் உள்ள வம்சவரலாறுகள், தேசத்துக்குத் திரும்பி வந்தவர்களைப் பட்டியலிடுவதால், இதை நாம் அறிகிறோம். மேலும், நாளாகம புத்தகத்தின் ஆசிரியர் 2 நாளாகமம் 36:22, 23-ல் கோரேசு கட்டளையுடன் தன் புத்தகத்தை முடித்தார்.

இந்த இரண்டு ஆசிரியர்களும் இஸ்ரவேலில் நன்கு கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தனர் என்பதையும் நாம் அறிவோம். இரண்டு ஆசிரியர்களும் தேவனுடைய ஜனங்களின் தலைவர்களுக்கு மட்டுமே கிடைத்திருக்கும் ராஜ வரலாற்று பதிவேடுகளில் உள்ள தகவல்களைக் குறிப்பிட்டனர். மேலும் நாளாகமத்தின் ஆசிரியர் வேதத்தில் இல்லாத தீர்க்கதரிசன செய்திகளின் தொகுப்புகளையும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களைப் பற்றிய இந்த சில உண்மைகளை அறிவது அவர்களின் பொதுவான இறையியல் நோக்கங்களில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. ராஜாக்களின் ஆசிரியர் தம்முடைய ஜனங்களை சிறையிருப்புக்கு அனுப்புவதில் தேவனுடைய நீதியை வலியுறுத்தினார் என்று பல்வேறு வியாக்கியான அறிஞர்கள் சரியாகவே முடிவு செய்திருக்கிறார்கள். இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்புவதற்கு முன்பாக மனந்திரும்ப வேண்டியதன் அவசியத்திலும் அவர் கவனம் செலுத்தினார்.

இதற்கு நேர்மாறாக, இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்பிய பிறகு பின்பற்ற வேண்டிய நடைமுறை நடவடிக்கைகளை நாளாகமத்தின் ஆசிரியர் வலியுறுத்தினார் என்பதை பல வியாக்கியான அறிஞர்கள் சரியாகவே முடிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தேசத்தை மறுபடியும் கட்டியெழுப்பும்போது கீழ்ப்படிதலுக்காக அவர்கள் பெறும் ஆசீர்வாதங்களிலும், கீழ்ப்படியாமைக்காக அவர்கள் பெறும் சாபங்களிலும் அவர் கவனம் செலுத்தினார்.

இந்த ஆசிரியர் நம்புபவைகள் மற்றும் ஆசிரியரின் நம்பிக்கைகளைப் பற்றி நாம் சொல்லக்கூடிய பல விஷயங்கள் உள்ளன, அவர்களின் அசல் வாசகர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக அவர்கள் இலக்கிய நுட்பங்களைப் பயன்படுத்திய விதத்தை பகுப்பாய்வு செய்ய அவற்றைப் பற்றி போதுமான அறிவு நம்மிடம் உள்ளது என்பது தான் முக்கியமான விஷயம். மற்ற வேதாகம எழுத்தாளர்களைப் பற்றி நம்மிடம் இன்னும் கூடுதலான தகவல்கள் உள்ளன, எனவே நாம் வியாக்கியானம் செய்யும்போது,

எழுத்தாளரின் மீது தொடர்ந்து கவனம் செலுத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எழுத்தாளரின் மீது கவனம் செலுத்துவதோடு, பழைய ஏற்பாட்டின் பொறுப்பான இலக்கிய பகுப்பாய்வானது அசல் வாசகர்களின் மீதும் கவனம் செலுத்துகிறது. பழைய ஏற்பாட்டு புத்தகங்களை முதலில் பெற்றது யார்? அவர்களின் சூழ்நிலை என்ன? இந்த வேதவாக்கியங்கள் அவர்கள் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும்?

## வாசகர்கள்

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் எழுத்தாளர்களை நாம் கருத்தில் கொள்ளும்போது ஆபத்துக்களும் நன்மைகளும் இருப்பதைப் போலவே, அசல் வாசகர் மீது கவனம் செலுத்துவதன் மூலம் இருக்கக்கூடிய ஆபத்துக்களையும் நன்மைகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும். ஒரு புறம், வியாக்கியான அறிஞர்கள் வாசகர்களைப் பற்றி அதிகமாக ஊகிக்கும்போது ஆபத்துக்கள் உள்ளன. அவர்கள் தங்கள் துல்லியமான அடையாளத்தை கற்பனை செய்கிறார்கள். அவை வாசகர்களின் சூழ்நிலைகளின் குறிப்பிட்ட விவரங்களை மறுகட்டமைப்பு செய்கின்றன. அவர்கள் தங்கள் உளவியல் நிலைமைகளைப் பற்றி ஊகிக்கிறார்கள். அவர்கள் தங்கள் பலம் மற்றும் பலவீனங்களை கற்பனை செய்து மிகவும் தூரம் போகிறார்கள். வாசகர்கள் மீது இருக்கின்ற இந்த வகையான அதிகப்படியான அழுத்தங்கள் ”உணர்ச்சிகரமான பொய்மை” என்று அழைக்கப்படலாம்.

> வாசகரின் அந்த உளவியல்-உணர்ச்சி நிலையை எடுத்து, ஒரு வேத பகுதியின் பிற பரிசீலனைகளை நீக்க அதைப் பயன்படுத்துகின்ற இடத்தில்தான் உணர்ச்சிகரமான பொய்மை உள்ளது. உதாரணமாக, அந்நிய தேசத்தில் சிறைப்பட்ட மக்களுக்காக எழுதப்பட்ட புலம்பல் சங்கீதம் நாம் அடையாளம் காணக்கூடிய ஒன்று என்பதால், அதே உளவியல்-உணர்ச்சி நிலைமைகளின் கீழ் நாம் இல்லாதபோது அந்த சங்கீதம் நம்மிடம் பேசவில்லை என்று அர்த்தமல்ல. அந்த அசல் சூழ்நிலைகளுக்கு அப்பால் வேதாகமம் பேசுவதில்லை என்று நம்புவதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இந்த உணர்ச்சிகரமான பொய்மை நம்மை இட்டுச்செல்லும் என்பது முதலாவது காரியமாகும். மற்றொரு பெரிய ஆபத்து என்னவென்றால், நம்முடைய சொந்த உளவியல்-உணர்ச்சி நிலையுடன் வாசகர்களின் உளவியல்-உணர்ச்சி நிலையை நாம் தவறாக அடையாளப்படுத்துகிறோம், அதாவது நாம் வேத பகுதியில் உள்ள விஷயங்களை தவறாக வியாக்கியானம் கொள்கிறோம் அல்லது படிக்கத் தவறுகிறோம், இதனால்

> நம்முடைய சொந்த தனிப்பட்ட சூழ்நிலையை வேத பகுதியின் மீது திணிக்கிறோம். அது இந்த நாட்களில் ஒரு பொதுவான விஷயமாகும், ஏனென்றால், வேத பகுதி, ஆசிரியர் மற்றும் வாசகர்களின் அடிப்படையில், நம்முடைய நாள் ஒரு "வாசகரை மையமாகக் கொண்ட" வழியில் வேத பகுதிகளைப் படிப்பதன் மூலம் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. ஆசிரியரின் நோக்கங்களுக்கு ஏற்ப ஆசிரியரை நாம் பேச அனுமதிக்க வேண்டும், மேலும் வேத பகுதியின் வார்த்தைகள், அத்துடன் வாசகரின் சூழ்நிலை ஆகியவற்றோடு அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம் அனுமதிக்க வேண்டும்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

அதே நேரத்தில், பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் வாசகரைக் கவனிப்பதிலிருந்து நாம் பல நன்மைகளைப் பெற முடியும். நமக்கு பல பயனுள்ள தகவல்கள் தெரியும். அவற்றின் பொதுவான இருப்பிடத்தை நாம் அடிக்கடி அறிவோம். அவர்கள் அனுபவித்த சில முக்கிய நிகழ்வுகளை நாம் அடிக்கடி அறிவோம். பெரும்பாலான ஜனக் குழுக்களைப் போலவே, தேவனுக்கு முன்பாக தங்கள் உடன்படிக்கைப் பொறுப்புகளுக்கு சிலர் உண்மையுள்ளவர்களாகவும், மற்றவர்கள் துரோகம்பண்ணுகிறவர்களாகவும் இருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இந்த வெளிச்சத்தில், ராஜாக்கள் மற்றும் நாளாகம புத்தகங்களின் அசல் வாசகர்களைப் பற்றி நமக்குத் தெரிந்ததை நாம் கருத்தில் கொள்வோம். எடுத்துக்காட்டாக, ராஜாக்கள் புத்தகத்தின் வாசகர்கள் இன்னும் சிறையிருப்பில் தான் இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். ராஜாக்கள் புஸ்தகத்தில் அழுத்தமாகச் சொல்லப்படும் காரியங்களைப் பார்க்கும்போது, அசல் வாசகர்களில் சிலராவது, தேவன் தம்முடைய ஜனங்களை சிறையிருப்பிற்கு அனுப்பியது நியாயம் தான் என்று நம்ப வேண்டியிருந்தது. இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குத் திரும்புவதற்கு முன்பாக மனந்திரும்புதல் தேவை என்பதை வாசகர்களில் சிலர் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது என்பதை நாம் அறிவோம்.

இதற்கு நேர்மாறாக, நாளாகமத்தின் ஆசிரியர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குத் திரும்பிவந்த ஒருவருக்கு எழுதினார். எஸ்றா, நெகேமியா, ஆகாய் ஆகியோரின் புஸ்தகங்கள், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் அநேகர் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கத் தவறிவிட்டார்கள் என்பதைத் தெளிவாக்குகின்றன. இதன் விளைவாக, இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்தை மறுகட்டுமானம் செய்வதற்கான தங்கள் அர்ப்பணிப்பில் அவர்கள் வளர வேண்டியிருந்தது. ராஜாக்கள் மற்றும் நாளாகமம் புத்தகத்தின் அசல் வாசகர்களைப் பற்றிய இந்த உண்மைகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெறுமனே தெரிந்துகொள்வது இந்த புத்தகங்களின் இலக்கிய உருவப்படங்களைப் பற்றி அதிகம் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

> ஒரு அசல் வாசகருக்கு அல்லது மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தேவன் தன்னை வெளிப்படுத்தினார். இது வேதாகமத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க விஷயங்களில் ஒன்றாகும். அது வெறுமனே மேலிருந்து வந்த அறிவுரைகளின் ஒரு தொகுப்பு அல்ல. தேவன் ஒரு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட மக்களுடன் பேசிக்கொண்டிருந்தார், எனவே அவர்கள் தேவனிடமிருந்து என்ன கேட்கிறார்கள், எதைப் பெறுகிறார்கள் என்பதை அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்கள் என்பதை நாம் அறிந்தால், அது நமது சொந்த புரிதலுக்கான வரம்புகள் என்ன என்பதை அறிய நமக்கு உதவுகிறது. அசல் வாசகர்கள் அதைப் புரிந்துகொண்டதிலிருந்து மிகவும் வித்தியாசமாக வேதத்தை நான் புரிந்து கொண்டால், என் புரிதலில் ஏதோ தவறு இருக்கிறது என்று அர்த்தம். நிச்சயமாக, என் சொந்த சூழல் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும், ஆனால் என் சொந்த சூழல் அவர்களின் சூழலின் வெளிச்சத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும், பின்னர் வேத வியாக்கியானத்தின் சாத்தியமான வரம்புகள் என்னவாக இருக்கும் என்பதை நான் அறிவேன்.
>
> – Dr. ஜான் ஆஸ்வால்ட்

இலக்கியப் பகுப்பாய்வானது எழுத்தாளர் மற்றும் அசல் வாசகர்களில் எவ்வாறு கவனம் செலுத்துகிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், பழைய ஏற்பாட்டினுடைய இலக்கியப் பகுப்பாய்வின் மூன்றாவது மற்றும் முதன்மை காரியமான ஆவணத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## ஆவணம்

வேதாகமத்தின் ஆவணங்கள் இலக்கியப் பகுப்பாய்வின் முதன்மைக் கவனமாக இருக்கின்றன, ஏனென்றால் அவை தேவனுடைய முழு அதிகாரமுள்ள வார்த்தையாகும். எனவே, ஆவணத்தின் மீது கவனம் செலுத்துவதன் அபாயங்கள் மற்றும் நன்மைகள் குறித்து நாம் சிறப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு புறம், ஆவணத்தில் மட்டுமே கவனம் செலுத்துவதில் ஒரு ஆபத்து உள்ளது. துரதிருஷ்டவசமாக, சமீபத்திய தசாப்தங்களில், பல வியாக்கியான அறிஞர்கள் வேதாகமத்தின் வசனங்களே நமக்கு வேத விளக்கத்திற்குத் தேவையானவை என்று வலியுறுத்தியுள்ளனர். நாம் எழுத்தாளரையும்

வாசகர்களையும் கருத்தில் கொள்ளும்போது நாம் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற தன்மையைத் தவிர்க்கும் முயற்சியில், இந்த அறிஞர்கள் எழுத்தாளர் மற்றும் வாசகர்கள் மீதான கவனத்தை நாம் குறைத்து மதிப்பிட வேண்டும் என்று வாதிட்டுள்ளனர். உண்மையில், இது பின்பற்ற ஒரு நல்ல வழி அல்ல. வேத ஆவணமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட ஆவணம் அதை யார் எழுதினார்கள், யாருக்காக எழுதப்பட்டது என்பதைப் பொறுத்து மிகவும் வேறுபட்ட விஷயங்களைக் குறிக்கலாம். வியாக்கியான அறிஞர்கள் ஆவணத்தின் மீது பிரத்தியேகமாக கவனம் செலுத்தி, எழுத்தாளர் மற்றும் அசல் வாசகர்களைப் புறக்கணிக்கும்போது, அவர்கள் ”ஆவண பொய்மை” என்கிற வகையில் இணைகிறார்கள், அதாவது அவர்கள் ஆவணத்தையே அதிகமாக நம்பியிருக்கிறார்கள்.

> எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டு நூல்களை வாசிப்பதில் ஒரு பொய்மை உள்ளது, இது ”ஆவண பொய்மை” என்று அழைக்கப்படுகிறது, அதாவது வார்த்தைகளிலே அர்த்தங்கள் இருக்கின்றன. அதுவே போதுமானது என்கிறது தான் இதன் அர்த்தமாகும். குறிப்பாக நீங்கள் வேதாகமத்தைப் பற்றிய உயர்ந்த பார்வையைக் கொண்டிருந்தாலோ இந்த வார்த்தைகள் தேவனால் அருளப்பட்டவை என்பதை நீங்கள் நம்பினாலோ அது நன்றாக இருக்கும். ஆனால் அது என்ன செய்கிறதென்றால் அது ஆசிரியரையும் வாசகரையும் புறக்கணிக்கிறது. மேலும் வேத பகுதிகளின் அர்த்தமானது, வேத பகுதியின் சொற்களுக்குள் அமைந்துள்ளபோது எழுதப்பட்ட மக்களுக்கு ஆசிரியரின் நோக்கங்களால் உண்டாயிருக்கிறது … எனவே, ஆவண பொய்மையானது ஆசிரியர் மற்றும் அசல் வாசகர்களை புறக்கணிக்கிறது, ஏனென்றால் அவை அடிப்படை கூறுகளாக இருக்கின்றன. ஆசிரியர் மற்றும் வாசகரைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள விரும்பும் அளவுக்கு நாம் எப்போதும் அறிந்திருப்பதில்லை, ஆனால் வேதவாக்கியத்தின் போதுமைத் தன்மையானது, வேதவசனங்களை நியாயமாகவும் உண்மையாகவும் வியாக்கியானம் செய்வதற்கு தேவன் நமக்கு போதுமான தகவல்களைக் கொடுக்கிறார் என்று நமக்குக் கூறுகிறது, அந்த அடிப்படையில்தான் ஆசிரியர், வேத பகுதி மற்றும் வாசகர் ஆகியவைகளைப் பற்றி அறிவது சரியான அர்த்தத்தைக் கொடுக்கிறது.
>
> — Rev. மைக்கேல் ஜே. குளோடோ

மறுபுறம், ஆவணத்தைப் பற்றி நம்மால் முடிந்த அனைத்தையும் தெரிந்துகொள்வதோடு தொடர்புடைய பல நன்மைகள் உள்ளன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சொல்லகராதி, இலக்கணம், சொற்பொழிவு உருவகங்கள், வாக்கிய அமைப்பு, வரையுரை, இலக்கியச் சூழல், வகை மற்றும் பல, வேதாகமத்தின் மூல அர்த்தத்தையும் நவீன பயன்பாடுகளையும் கண்டுபிடிப்பதற்கு பெரிதும் பங்களிக்கின்றன. எனவே, ஒரு வேத பகுதியின் இந்த அம்சங்களைப் பற்றி நம்மால் இயன்றவரை புரிந்துகொள்வது வேதாகமத்தை சரியாக வியாக்கியானம் செய்வதற்கு முக்கியமானதாகும். நாம் படித்துக் கொண்டிருக்கும் ஆவணங்களின் குறிப்பிட்ட அம்சங்களை மிக உன்னிப்பாக கவனிக்காமல், வேதாகமத்தை பொறுப்புடன் வியாக்கியானம் செய்ய முடியாது.

ஆனால் ஒவ்வொரு வேத பகுதியையும் எழுத்தாளர் மற்றும் அசல் வாசகர்களின் வெளிச்சத்தில் நாம் கருத்தில் கொள்ளும்போது நாம் அதிக நன்மைகளைப் பெறுகிறோம். பழைய ஏற்பாட்டு வசனங்களை எழுத்தாளர் மற்றும் வாசகரின் சூழலில் கவனமாகப் பார்ப்பதன் நன்மைகளை விளக்க, 2 நாளாகமம் 33:1-20 இல் காணப்படும் மனாசேயின் ஆட்சியைச் சுருக்கமாகப் பார்ப்போம். இந்த வேத பகுதியை நாம் படிக்கும்போது, 2 இராஜாக்கள் 21:1-18 இல் மனாசேயின் ஆட்சியைப் பற்றி இணையான விவரிப்பு இருப்பதால் நமக்குப் பெரும் நன்மை கிடைக்கிறது. நாளாகமம் என்ற நூலை எழுதியவர் தனது பதிவை வடிவமைத்தபோது, அவர் அதை பிரதியெடுத்து, சில பகுதிகளை மாற்றி, சிலவற்றைத் தவிர்த்தார், பிறகு 2 இராஜாக்கள் 21 உடன் தனது பார்வையாளர்களை நோக்கிய அவரது நோக்கங்களுக்குப் பொருந்தும் கூறுகளைச் சேர்த்தார். 2 இராஜாக்கள் 21-ல் உள்ள தகவலை முதலில் பார்ப்பதன் மூலம் இது எப்படி உண்மை என்று பார்ப்போம்.

2 இராஜாக்கள் 21 ஐந்து சமச்சீர் பகுதிகளாகப் பிரிகிறது: முதலாவது, வசனம் 1 - மனாசேயின் ஆட்சியின் தொடக்கம்; இரண்டாவதாக, வசனங்கள் 2-9 – மனாசேயின் விக்கிரகாராதனை பாவம்; மூன்றாவது, வசனங்கள் 10-15 – மனாசே பெற்ற தீர்க்கதரிசன ஆக்கினைத்தீர்ப்பு; நான்காவதாக, வசனம் 16 – மனாசேயின் வன்முறையின் பாவங்கள்; மற்றும் ஐந்தாவது, வசனங்கள் 17, 18 - மனாசேயினுடைய ஆட்சியின் முடிவு.

இந்த திட்டவரை குறிப்பிடுவது போல, 2 இராஜாக்கள் 21 இல் மனாசே ஆரம்பம் முதல் முடிவு வரை தீயவனாக வகைப்படுத்தப்படுகிறான். அவர் ஒரு பெரிய பாவியாக அறிமுகப்படுத்தப்படுகிறார். இக்கதையின் இரண்டாம் பகுதியானது, அவர் விக்கிரகங்களால் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, கானானியரைப்பார்க்கிலும் அதிகத் தீமையைச் செய்ய ஜனங்களை எப்படி வழிநடத்தினார் என்பதைப் பற்றி விவரிக்கிறது. கதையின் மூன்றாவது பகுதி மனாசேயின் தீர்க்கதரிசன கண்டனம் ஆகும். இந்த தீர்க்கதரிசன வார்த்தையின்படி, மனாசேயின் பாவங்கள் எருசலேமின் அழிவுக்கும் அதன் மக்கள் அந்நிய தேசத்திற்கு சிறைப்படுத்தப்படுவதற்கும் வழிவகுத்தன. கதையின் நான்காவது பகுதி, மனாசே எருசலேமின் தெருக்களை குற்றமற்ற இரத்தத்தால் நிரப்பினான் என்று கூறுகிறது. பின்னர் கடைசிப் பகுதி மனாசே மரித்து அடக்கம் செய்யப்பட்டதைத் தெரிவிக்கிறது.

2 இராஜாக்கள் 21 முழுவதிலும் மனாசேயினுடைய ஆட்சியின் ஒரு நேர்மறையான அம்சத்தைக் கூட நம்மால் பார்க்க முடியாது. ஆனால் இப்போது, 2 இராஜாக்கள் 21-ல் உள்ள மனாசேயின் ஆட்சிக்காலத்தின் பதிவை 2 நாளாகமம் 33-ல் உள்ள அவருடைய ஆட்சியின் இணையான விவரத்துடன் ஒப்பிடுவோம். 2 இராஜாக்கள் 21 உடன் நாளாகம ஆசிரியர் முரண்படவில்லை, ஆனால் அவருடைய அசல் பார்வையாளர்களை நோக்கிய அவரது நோக்கங்கள் அவரை மிகவும் வித்தியாசமான ஒரு தகவலைக் கொடுக்க வழிவகுத்தது. இரண்டாம் நாளாகமம் 33:1-20 ஐந்து முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, 1-ம் வசனம் மனாசேயின் ஆட்சியின் தொடக்கத்தை அறிமுகப்படுத்துகிறது, இது பெரும்பாலும் 2 இராஜாக்களிடமிருந்து நேரடியாக நகலெடுக்கப்படுகிறது. இரண்டாவதாக, 2-9 வசனங்களில், மனாசேயின் விக்கிரகாராதனைகள் 2 இராஜாக்கள் 21:1-9 லிருந்து சிறிய வேறுபாடுகளுடன் மட்டுமே விவரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டம் வரை, நாளாகம ஆசிரியரின் பதிவு 2 இராஜாக்களின் பதிவை நெருக்கமாக ஒத்திருக்கிறது. இரண்டு பதிவுகளிலும், மனாசே ஒரு பயங்கரமான பாவியாக சித்தரிக்கப்படுகிறார். ஆனால் 2 நாளாகமம் 33-ன் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பிரிவுகள் 2 இராஜாக்களிடமிருந்து வியத்தகு முறையில் வேறுபடுகின்றன. மனாசேயின் பாவங்களினிமித்தம் எருசலேமின் குடிகள் வேறு தேசத்திற்கு சிறைப்படுவார்கள் என்ற தீர்க்கதரிசிகளின் அறிவிப்பை மூன்றாவது பகுதி முற்றிலுமாகத் தவிர்க்கிறது. அதற்குப் பதிலாக, 10-13 வசனங்களில், மனாசே தாமே எப்படி தனிப்பட்ட முறையில் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டார் என்பதை நாளாகமம் விவரிக்கிறது. இதை விட மேலாக, அவர் மனாசே நாடுகடத்தப்பட்ட போது தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனிடமிருந்து மன்னிப்பு பெற்றார் என்ற அறிக்கையையும் தருகிறது. பின்னர், நான்காவது பிரிவில், 2 இராஜாக்களில் தெரிவிக்கப்பட்ட மனாசேயின் வன்முறையைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, மனாசே எருசலேமுக்குத் திரும்பி, நகரத்தை மறுகட்டுமானம் செய்து, ஆலயத்தில் தேவனுடைய சரியான ஆராதனையை மீட்டெடுத்ததாக நாளாகமம் 14-17 வசனங்களில் நாளாகம ஆசிரியர் அறிவித்தார். இறுதியாக, 2 நாளாகமம் 33:18-20 இல் மனாசேயினுடைய ஆட்சியின் முடிவு மனாசேயின் மனந்திரும்புதலுக்கான ஜெபத்தைப் பற்றிய மற்றொரு குறிப்பைச் சேர்ப்பதன் மூலம் 2 இராஜாக்களின் விரிவாக்கமாக காணப்படுகிறது. 2 இராஜாக்களில் மனாசேயின் வாழ்க்கையைப் பற்றிய பதிவுக்கும் 2 நாளாகமத்தில் உள்ள பதிவுக்கும் உள்ள இந்த வேறுபாடுகளை நாம் எப்படி விளக்க வேண்டும்? இந்த தகவல்கள் ஏன் மிகவும் வித்தியாசமாக உள்ளன?

சுருக்கமாகச் சொன்னால், ராஜாக்கள் புத்தகமும் நாளாகம புத்தகமும் வெவ்வேறு எழுத்தாளர்களாலும் வெவ்வேறு வாசகர்களுக்காகவும் இயற்றப்பட்டன என்ற உண்மையின் மூலம் இந்த வேறுபாடுகளை விளக்க முடியும். ஒவ்வொரு எழுத்தாளரும் தனது வாசகர்களின் வாழ்க்கையை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெவ்வேறு வழிகளில் பாதிக்கும் வகையில் தனது தகவல்களை வடிவமைத்தனர். மனாசேயின் ஆட்சியைப் பற்றிய ஒரு விரிவான, புறநிலைப்படுத்தப்பட்ட விவரணையைக் கொடுக்க இராஜாக்களின் எழுத்தாளர் எழுதவில்லை. மாறாக, அவருடைய புத்தகத்தின் முக்கிய கருப்பொருளில் ஒன்றான தேவன் எருசலேமுக்கு எதிராக நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரவும், மனாசேயின் நிமித்தம் தம்முடைய ஜனங்களை சிறைப்படுத்தவும் என்பதை விளக்குவதற்கு மனாசேயின் பயங்கரமான பாவங்களைப் பற்றி அவர் எழுதினார்.

ஆனால் நாம் ஏற்கனவே பார்த்தபடி, நாளாகம ஆசிரியரின் நிலைமை மிகவும் வித்தியாசமாக இருந்தது. தேவனுக்கு உண்மையுள்ள சேவை செய்ய முன்னோக்கிச் செல்ல போராடும் மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சமூகத்தை ஊக்குவிக்கும் முயற்சியில் சிறைப்படுத்தப்பட்ட பிறகு அவர் தனது வரலாற்றை எழுதினார். இந்தக் காரணத்தினாலேயே, நாளாகம ஆசிரியர் மனாசேயைப் பற்றிய அவருடைய நோக்கங்களுக்குப் பொருத்தமான உண்மையான சில காரியங்களை தவிர்த்து, சில காரியங்களைச் சேர்த்தார். மனாசேயின் வாழ்க்கையிலிருந்து அவருடைய சொந்த இஸ்ரவேல் வாசகர்களின் வாழ்க்கையிலுள்ள தகவல்களுக்கு இணையான விவரங்களை அவர் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார். மனாசே பயங்கரமாய்ப் பாவஞ்செய்தான், அவர்களும் பாவம் செய்தார்கள். மனாசேயும் இஸ்ரவேலர்களும் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டார்கள். மனாசே மனந்திரும்பி மன்னிக்கப்பட்டான், அப்படியே அவர்களும் மன்னிக்கப்பட்டார்கள். ஒருவேளை மிக முக்கியமாக, மனாசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்பி வந்தவுடன், அவன் எருசலேம் நகரத்தை மீண்டும் கட்டியெழுப்பி, முறையான ஆராதனையை மீட்டெடுத்திருப்பார். இதுதான் அவருடைய காலத்தில் நாளாகம ஆசிரியரின் வாசகர்கள் எதிர்கொண்ட துல்லியமான சவாலாக இருந்தது. பின்வருவது தான் நாளாகம ஆசிரியரின் முக்கிய கருத்தாக இருந்தது: யூதாவின் சிறைபிடிப்புக்குக் காரணமான ராஜாவும் தேசத்துக்குத் திரும்பும்போது ராஜ்யத்தை மறுபடியும் கட்டி, ராஜ்யத்தை மீட்டெடுத்தால், நிச்சயமாகவே நாளாகம ஆசிரியரின் வாசகரும் அதையே செய்ய வேண்டுவதாக இருக்கும்.

மனாசேயின் ஆட்சிக் காலத்தைப் பற்றிய குறிப்புகளுக்கு இடையிலான இந்த ஒப்பீடானது, பழைய ஏற்பாட்டு புத்தகங்களைப் படங்களாக அல்லது இலக்கிய உருவப்படங்களாகக் கருதுவது ஏன் மிகவும் முக்கியமானது என்பதை நிரூபிக்கிறது. நமக்கு ஆர்வமுள்ள கருப்பொருள்கள் மற்றும் உண்மையான வரலாற்று பதிவுகள் பழைய ஏற்பாட்டில் தோன்றினாலும், பின்வரும் உண்மையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்: பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் அசல் வாசகர்கள் வாழ வேண்டிய குறிப்பிட்ட வழிகளை வலியுறுத்துவதற்காக தங்கள் புத்தகங்களின் உள்ளடக்கங்களையும் கட்டமைப்புகளையும் வடிவமைத்தனர். இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வகையான இலக்கிய அணுகுமுறை இன்று நமக்கு பழைய ஏற்பாட்டு வேதாகமத்தில் பல நுண்ணறிவுகளைத் திறக்கிறது.

# முடிவுரை

இந்தப் பாடத்தில், தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய உடன்படிக்கைகளையும் பற்றி அவர்கள் நம்பியதை அவர்கள் எதிர்கொண்ட சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் தேவனுடைய மக்களின் தேவைகளை பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு நிவர்த்தி செய்ததை நாம் பார்த்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டு நூல்கள் இதை பல வழிகளில் செய்தன. பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை நாம் ஒரு கண்ணாடியாக அணுகும்போது, நமக்கு முக்கியமான எண்ணற்ற கருப்பொருள்களை இந்தப் புத்தகங்கள் எவ்வாறு பேசுகின்றன என்பதைக் காண்கிறோம். நாம் நூற்தொகுப்பை ஒரு ஜன்னலாக அணுகும்போது, அவை வரலாற்றிற்கு உண்மையான கண்ணோட்டங்களை எவ்வாறு வழங்குகின்றன என்பதைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பை இலக்கியப் படங்கள் அல்லது உருவப்படங்களின் தொகுப்பாகக் கருதும்போது, இந்த கருப்பொருள்கள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் அனைத்தின் மீதும் சில கண்ணோட்டங்களை நாம் அங்கீகரிக்கிறோம்.

கிறிஸ்துவின் நேர்மையான சீஷர்களாக, பழைய ஏற்பாட்டின் புத்தகங்களை நமது ஆர்வங்களையும் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் கண்ணாடிகளாகவும், வரலாற்றில் தேவனுடைய வல்லமைமிக்க செயல்களை வெளிப்படுத்தும் ஜன்னல்களாகவும், தேவனுடைய மக்கள் பின்பற்ற வேண்டிய சேவையின் குறிப்பிட்ட பாதைகளை வலியுறுத்தும் இலக்கிய உருவப்படங்களாகவும் அணுகுவது எப்படி என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பண்டைய உலகில் பல்வேறு வாய்ப்புகளையும் சவால்களையும் எதிர்கொண்ட பல வேறுபட்ட மக்களுக்காக பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பின் புத்தகங்கள் முதன்முதலில் எழுதப்பட்டன. இன்று நம் வாழ்க்கையில் இதே போன்ற வாய்ப்புகளையும் சவால்களையும் நாம் எதிர்கொள்ளும்போது, கிறிஸ்து மகிமையில் திரும்புமட்டும் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காக, தேவனுடைய உடன்படிக்கைகளுக்கு நாம் எவ்வாறு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் நமக்குக் கற்பிக்கின்றன.